# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி 23411 விலை: சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, கார்த்: 23; ஜுல்கஃ 23 (8-12-74) ஞாயிறு புத்தகம் 28 இதழ் 16


## சிங்களவரை விடத் தமிழர்கள் வசதியுடன் வாழ்கின்றனராம்!

### சமசமாஜத்தலைவரின்வகுப்புவாதம்!

"எனது சொந்தக்கருத்தின்படி தமிழர்களுக்கு எந்தப் பிரச்சினையுமே இல்லை.''—இவ்வாறு தேசிய அரசுப் பேரவையில் கூறி இருக்கிறார் சமசமாஜத் தலைவரும் நிதியமைச்சருமான டாக்டர் என். எம். பெரேரா அது மட்டுமன்றி, சிங்களவர்களிலும் பார்க்க தமிழர்கள் அதிக வசதியுடன் வாழ்வதாகவும் அவர் அங்கு வகுப்பு வாதத்தை கக்கியிருக்கிறார்!

சென்ற நவம்பர் 22ம் திகதியன்று தேசிய அரசுப் பேரவையில் பேசிய மூதூர் பா. உ. திரு. அ. தங்கத்துரை மலையகத் தமிழ்த் தொழிலா

—5-ம் பக்கம் பார்க்க

### "அரசவேசைகள் ஒழுக்காற்றுச் சபை"!

என்ன இது சுதந்திரனில் அச்சுப்பிழையா? அல்லது அரசாங்கமே விபசார விடுதி நடத்துகிறதா என்று சந்தேகிக்கிறீர்களா? அப்படியொன்றுமில்லை! அமைச்சர் பீலிக்ஸ் டயசின் அமைச்சிலிருந்து அனுப்பப்பட்ட 93ம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை யொன்றிலேயே ''சேவைகள்'' என்பது வேசைகளாகி, இப்படித் தமிழ்க்கொலை நடந்திருக்கிறது!

### சமசமாஜிகளே! உங்களுக்கு சூடு சொரணை உண்டா

''நாட்டின் சட்டம் சகலருக்கும் சமம் என்பதை நிலைநாட்டவே சமசமாஜக் கட்சித்தொழிற்சங்கத்தின் ஊர்வலத்தை தடுத்தேன்!''

-பிரதமர்(28-11-74ல்தேசிய பேரவையில்பேசியது)

சென்னையில் உள்ள இலங்கைத் தூதராலயத்திலும் மகாபோதி சங்கத்திலும் குண்டுவெடிப்பு சம்பவம் நடைபெற்றதை ஆட்சேபிக்குமுகமாக உடுப்பிட்டியில் அமைச்சர் செல்லையா குமாரசூரியர் தலைமையில் (2-12-74ல்) இரண்டு மைல் நீளமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம்பெற்றது.

—செய்தி (வீரகேசரி 2-12-74 ஈழநாடு 3-12-74)

# யாழ்ப்பாணத்திலும் சிங்களக்குடியேற்றம்

### பயங்கர விளைவுகளை ஏற்படுத்துமென ஆட்சியாளருக்கு அமிர் எச்சரிக்கை!

தனித் தமிழ் நாடாக விளங்கிவரும் யாழ்ப்பாணத்துக்குள் சிங்கள பௌத்த ஆதிக்கத்தை புகுத்துவதற்கு பல்கலைக்கழக வளாகம் ஒரு நுழைவாயிலாக பயன்படுத்தப்படும் என்று சுதந்திரன் பன்னிப்பன்னிக் கூறிவந்தது இன்று உண்மையாகிவிட்டது.

பல்கலைக்கழக வளாகம் திறக்கப்பட்டு இரு திங்கள் கழிவதற்கு முன்னரே, வளாகத்தின் சுற்றுடலை ஒரு சிங்களக் குடியேற்றமாக மாற்றுவதற்கு இரகசிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறிய வருகிறது.

இத்தகைய முயற்சிகளை அரசு கைவிட வேண்டுமென்றும் இன்றேல் இது பயங்கர விளைவுகளை ஏற்படுத்தக் கூடுமென்றும் தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகமும், தமிழரசுக் கட்சித்தலைவருமான நாவலர் அமிர்தலிங்கம் கடுமையாக எச்சரித்துள்ளார்.

### ● சுதந்திரனின் தீர்க்கதரிசனம் உண்மையாகிறது —

இதுசம்பந்தமாக நாவலர் அமிர்தலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

"திருநெல்வேலிப் பகுதியில் வளம் மிகுந்த செம்மண் பிரதேசத்தில் நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்குவதற்காக தனியார் காணிகளை அரசு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அங்கு காணி பெறுவதற்காக நிலமற்ற 120க்கு மேற்பட்ட மக்கள் விண்ணப்பித்திருக்கின்றனர். ஆனால் பல்கலைக்கழக வளாகம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து அதை ஒரு சிங்களக் குடியேற்றமாக மாற்ற ஓர் இரகசிய முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

எவ்வித வாசகாலத் தகுதியுமற்ற வெளிப் பிரதேச

—5-ம் பக்கம் பார்க்க

## புதிய அரசியல் சட்டத்துக்கு மரண அடி கொடுப்பதற்கு விரைவில் வருகிறது வாய்ப்பு!



தமிழ்மக்களின் சம்மதமின்றி அவர்கள்மீது திணிக்கப்பட்டுள்ளதும், தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காததுமான புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் முற்றாக நிராகரிக்கிறார்கள் என்பதை ஜனநாயக ரீதியாக ஆணித்தரமான முறையில் எடுத்துக் காட்டக் கூடிய அரிய வாய்ப்பு காங்கேசன்துறைத் தொகுதி மக்களுக்கு விரைவில் கிடைக்கவிருக்கிறது.

காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்துவதற்கு தடையாக பிரகடனப் படுத்தப்பட்டிருந்த அவசரகாலச் சட்டவிதியை 2-12-74 நள்ளிரவுடன் அரசு நீக்கியுள்ளது. இதன் காரணமாக கடந்த 26 மாதங்களாக நடைபெறுமலிருந்து வந்த இந்த இடைத்தேர்தல் விரைவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இடைத்தேர்தலில் தந்தைசெல்வாவுடன் அரசாங்க சார்பில் போட்டியிடுபவர் யாராயிருந்தாலும் அவர் தமிழர்களை கொத்தடிமையாக்கியுள்ள புதிய அரசியல் அமைப்பின் ஆதரவாளராக—சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னமாகவே தமிழ் மக்களால் கருதப்படுவார்!

### சிங்களச் சிறையில் உணர்ச்சிக் கவிஞர் இன்றுடன் 912 நாள்!

## சென்னையில் சனுர்த்தனம் உண்ணாவிரதம்!



ஈழத்தில் தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பதை உலகத்தின் கண்களில் தெரியப்படுத்தும் ஒரு முயற்சியாக — சாவதேச மனித உரிமை நாளாகிய எதிர்வரும் டிசம்பர் 10ம் திகதி காலை சென்னை அண்ணாசாலையிலுள்ள தயால் அலுவலகம் முன்பு உலகத் தமிழ் இளைஞர் பேரவையினர், டாக்டர் இரா. சனுர்த்தனம் அவர்கள் தலைமையில் உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

அன்றைய தினம் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து, சென்னையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றும், மாலை பொதுக் கூட்டமும நடைபெறவுள்ளன. உலகத் தமிழ் இளைஞர் பேரவை, முன்னாள் இ. தி.

—5-ம்பக்கம் பார்க்க

## 1958ல் தமிழர் மீது பாய்ந்த சிங்கள இனவெறி இன்று முஸ்லிம்களுக்கு எதிராக திரும்புகிறது!

1958ம் ஆண்டு சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கு எதிராக மிகப்பயங்கரமான முறையில் கட்டவிழ்த்து விடப்பட்ட சிங்களப்பெரும்பான்மை ஆதிக்கவெறி, இப்போது முஸ்லிம் மக்களுக்கு எதிராகத் திரும்பியிருக்கிறது.

இதன் காரணமாக, மஹியங்கனை, பாணந்துறை ஆகிய இடங்களில் சிங்கள—முஸ்லிம் கலவரங்கள் அண்மையில் நடைபெற்றுள்ளன. மஹியங்கனையில் முஸ்லிம் மக்களின் மத நம்பிக்கைக்கு சிங்கள பௌத்தர்கள் மரியாதை அளிக்கமறுத்ததே கலவரங்களுக்கு ஒரு காரணமாக இருந்ததாக கூறப்படுகிறது.

பாணந்துறையிலும் சிங்கள—முஸ்லிம் கலவரங்கள் ஏற்பட்டு, இதன்விளைவாக கத்திக்குத்து, வழிப்பறி, கடையுடைப்பு வீட்டுக்கு கல்லெறிதல் போன்ற பயங்கர சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதுசம்பந்தமாக, ஹபாது வைப்பிரதிநிதி திரு. பிரின்ஸ் குணசேகரா தேசியபேரவை

—5-ம் பக்கம் பார்க்க

## கொழும்பில் மனித உரிமை நாள் விழா!

கொழும்பு ஆய்வுக் கழகத்தின் சார்பில் 10-12-74 செவ்வாய்க்கிழமை பி. ப. 5 மணிக்கு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் மனித உரிமை நாளையொட்டிய கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் திருவாளர்கள் எஸ். தொண்டமான், அ. தங்கத்துரை வி. தர்மலிங்கம், எம். எஸ். செல்லச்சாமி, எம். சிவசிதம்பரம், கலாநிதி நீலன் திருச்செல்வம், பிறின்ஸ் குண

5-ம் பக்கம் பார்க்க

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பொலீசையும் இராணுவத்தையும் நம்பினால்...! 'அலண்டேயின்' கதி உங்களுக்கு ஏற்படும் காலம் அதிக தூரத்தில் இல்லை!

## கூட்டுறவுக் கடைகளே இன்றைய அரசின் "வாட்டர்லூ!" வாகும்!

## வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பருத்தித்துறை பா. உ. எச்சரிக்கை!

"இந்த நாட்டிலேயிருக்கும் தொழிலாளிகளில்—விவசாயிகளில் அரசு நம்பிக்கைவைக்காமல்பொலிசாரிடத்திலும்,இராணுவத்தினரிடத்திலும் நம்பிக்கைவைத்தால், "அலண்டே"யினுடைய கதி உங்களுக்கு ஏற்படும் காலம் அதிக தூரத்திலேயில்லையென்பதை நான் உங்களுக்கு அச்சுறுத்திக்கூற விரும்புகிறேன்!"

இவ்வாறு தேசிய அரசப்பேரவையில் வரவுசெலவுத்திட்ட விவாதத்தின் போது பேசிய பருத்தித்துறை பிரதிநிதி திரு. க. துரைரத்தினம் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில் இந்த அரசாங்கத்தினுடைய "வாட்டர்லூ" நிச்சயம் கூட்டுறவுக் கடைகளாகத்தான் இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

அவரது பேச்சு வருமாறு:-

நான் இங்கே கூட்டுறவுச் சங்கக் கடைகளைப் பற்றித்தான் கூற விரும்புகிறேன். அது ஒரு பெரும் கதை; மிகக் கேவலமான ஒரு கதை. கூட்டுறவு இயக்கம் நன்கு வளர்ந்த ஒரு பிரதேசம் யாழ்ப்பாணம். 50 வருடங்களுக்கு மேலாகக் கட்டி வளர்த்த இந்தக் கூட்டுறவு இயக்கத்திலே இன்று கூட்டுறவு இயக்கம் என்னவென்று தெரியாதவர்கள்—கூட்டுறவுச் சங்கங்கள் என்றால் என்னவென்று தெரியாதவர்கள்—அரசாங்க நியமனங்கள் மூலம் உட்புகுந்துவிட்டார்கள்; குறிப்பாகப் புதிய கட்சிகளிலே சேர்ந்தவர்கள்—சிறப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலே சேர்ந்தவர்கள் புகுந்துவிட்டார்கள்.



அவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களுமல்ல. அவர்களுக்கென்று ஒரு கட்சியுமில்லை. 1970ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் பின்னர் தற்காலிகமாகச் சேர்ந்தவர்கள் தான் இவர்கள். நான் இதைச் சொல்லவில்லை. நீலச் சட்டை, சிவப்புச்சட்டை அணிந்த சந்தர்ப்பவாதிகள் தான் இவர்கள் என்று "ஜனவேகய" பத்திரிகை கூறுகிறது. முன்புஇலஞ்சத்திலும் ஊழலிலும் புரண்டு சேற்றிலே ஊறியவர்கள்தான் இப்பொழுது கூட்டுறவு இயக்கத்திலே தலைவர்களாகவும் உறுப்பினர்களாகவும் வந்திருக்கிறார்கள் என்று "ஜனவேகய"ப் பத்திரிகை எழுதியிருக்கிறது. கூட்டுறவு இயக்கம் சரியாக—ஒழுங்கான முறையிலே நடந்தால் இந்தப் பளு பெருமளவில் குறைந்துவிடும்.

இன்று எங்கு பார்த்தாலும் "கியூ" இருக்கிறது. அரசாங்கம் அதைப்பொறுப்பேற்று தனது கடைகளாக நடத்தினால் கூடப் பரவாயில்லை. ஏனென்றால், அரசாங்கத்துக்கு நேரடியாகச் சொல்லலாம எது சரி, எது பிழை என்று. ஒருகாலமும் கூட்டுறவு இயக்கத்திலே நம்பிக்கையில்லாதவர்களை—கூட்டுறவு சங்கத்தோடு தொடர்பில்லாதவர்களை அங்கே நியமித்து ஒரு புதிய வர்க்கத்தினரை உருவாக்கியிருக்கிறார்கள். (A new class of people) மிகப் பலம் படைத்த தரகர்கள் மலிந்திருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியிலேயுள்ள ஒரு கூட்டுறவுச் சங்கமேனும் இலாபத்திலே இயங்கவில்லை. என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற சங்கங்களை கடந்த வருடத்திலே எங்கள் பகுதிக் காரியாதிகாரி நடாத்தியபொழுது ஓர் இலட்சத்து அறுபதினாயிரம் ரூபா இலாபம் கிடைத்தது. இன்னுமொரு எஸ். எல். எவ். பி, பிரமுகர் நடத்தியபொழுது ஆக நட்டம் 38,000 ரூபாதான். இப்படியாகக் கூட்டுறவு இயக்கத்திலே பல ஊழல்கள் மலிந்திருக்கின்றன.

கூட்டுறவு இயக்கத்திலே உண்மையான கூட்டுறவு நோக்குடைய மக்கள் பங்குபற்றவேண்டும். இன்று கடன்கள் நேரத்திற்குக் கிடைப்பதில்லை. மக்களுக்குப் பொறுப்பில்லாதவர்கள்—அரசாங்கத்துக்கும் ஓரளவுக்குப் பொறுப்பில்லாதவர்கள் நியமிக்கப்படுவதனால், அது இப்பொழுது ஜே. பீ. பட்டம், சேர் பட்டம் கொடுக்கிறது போன்ற ஒரு நிலையாகத்தான் இருக்கிறது.

ஊரிலேயிருக்கின்றசில பிரமுகர்களுக்கு பட்டம் அளிப்பதுபோல பலரை உறுப்பினர்களாக அங்கே நியமித்துக்கொள்கிறார்கள். இந்த நியமனங்களுக்குப் பின்னர் அவர்கள் மக்களுக்கும்

—7-ம் பக்கம் பார்க்க

---

### தேசிய அரசப் பேரவையில்

## 'மழை'

கல்கிசைப் பிரதிநிதியும், நல்லூர்ப் பிரதிநிதியும் எங்களுடைய கட்சியினால்தான் மழைபெய்யாமல் போய்விட்டது என்ற மாதிரிப் பேசினார்கள். அப்பொழுது எனக்குக் கொஞ்சம் சிரிப்பாக இருந்தது. மணிமேகலையிலிருந்து ஒரு பாடல் எனக்கு நினைவுக்கு வந்தது.

கோல் நிலை திரியின்
கோள் நிலை திரியும்
கோள் நிலை திரியின்
மாரி வளம் குன்றும்!
மாரிவளம் குன்றின்
மன்னுயிர் இல்லை!
மன்னுயிர் இல்லா
தன்னுள் வேந்தன்
தகைமையன் தானே?"

நல்ல ஆட்சி நடைபெற்றால் மழை பெய்யும் என்று பழைய காலத்தில் சொன்னார்கள். இதே மாதிரி விவேக சிந்தாமணியிலும் சொல்கிறார்:-

அரிசி விற்றிடும் அந்தணர்க்கோர் மழை
வரிசை தப்பிய மன்னவர்க்கோர் மழை!
புருஷனைக் கொன்ற பூவையர்க்கோர் மழை!
வருஷம் மூன்று மழையெனப் பெய்யுமே!

இந்த மூன்று பேரும் இருக்கும் வரையிலே வருடத்திலே மூன்று மழைதான் பெய்யும். இப்படியான ரகத்திலேயுள்ளவர்கள் இருப்பதால்தான் மழை இன்று குன்றிப் போய்விட்டது! இப்படியான ஆட்கள்கூடினால் இன்னும் புரட்சி ஏற்பட்டு மக்களுக்கு கஷ்டம்தான் ஏற்படும்!

—தேசிய அரசப் பேரவையில்
பருத்தித்துறை பா. உ. க. துரைரத்தினம்

---

### கலாவெவ இடைத்தேர்தல் முடிவு காட்டுகின்ற உண்மை!

# விவசாயத் தொகுதியொன்றியிலேயே விலா முறிந்தது ஐக்கிய முன்னணிக்கு!

அண்மையில் நடந்து முடிந்து அரசியலில் ஓர் திருப்பத்துக்கு வழி வகுத்திடும் முடிவை வழங்கிய கலாவெவ தேர்தல் முடிவையிட்டு உரிமைகோரும் தமிழ் மக்கள் ஓர் ஆராய்ச்சி நடாத்திட வேண்டியது மிக அவசியமாகும்.

மன்னார் இடைத்தேர்தலில் போட்டியிடத் திராணியற்றிருந்த ஆட்சியினரும், அவர்தம் அடிவருடிகளும், தேர்தல் முடிவு வந்ததும் தங்களுக்கே வெற்றியென்று எக்காளமிட்டார்கள். அதற்கும் மேலால் தமிழர் கூட்டணியின் செல்வாக்கு சரிந்துவிட்டது என்றும்கூறி தங்களைத் தாங்களே திருப்திப் படுத்திக்கொண்டார்கள்.

வந்தது கலாவெவஇடைத்தேர்தல். தங்கள் மன்னார் வியாக்கியானத்துக்கு அங்கீகாரம் பெற தீவிரமாக உழைத்தார்கள். மக்கள் கால்களிலே மண்டியிட்டார்கள். தனது அரசியல் நடவடிக்கையை அங்கிகரிக்குமாறு பிரதம அமைச்சர "கலாவெவ" மக்களை தெட்டத்தெளிவாக நேரடியாகவே கேட்டார்.

அண்மையில் ஐ. தே. க. விலிருந்து விலகி சுதந்திரக் கட்சியில சேர்ந்த ஜனாப் எம். எம். முஸ்தபா அவர்கள் கூட முதன்முறையாக ஆளுங்கட்சிக்காகத் தேர்தல் பிரசாரத்தில் இறங்கினார். முஸ்லிம் மக்களுக்கு இந்த அரசே அதிகளவு நன்மையைச் செய்துள்ளதென்றும், விவசாயிகளுக்கு ஐ. மு. அரசே புத்துயிர் அளித்துள்ளது என்றும்கூறினார். தான் கூட விவசாயி என்ற முறையிலேயே ஐ. மு. அரசில் சேர்ந்ததாகவும் கூறினார். முஸ்லிம்அமைச்சரோ தனது பிரச்சாரத்தில் எண்ணற்ற முஸ்லிம் இளைஞர்கட்கு ஐ. மு. அரசே ஆசிரியர் பதவி வழங்கியதாகக் கூறினார்.

கலாவெவ தொகுதி சுதந்திரக்கட்சியின் ஒரு கோட்டை. இருபதாண்டு கட்கு மேலாக சுதந்திரக் கட்சியின் வெற்றித் தளமாக இத்தொகுதி விளங்கியுள்ளது. மேலும் கணிசமான முஸ்லிம் வாக்காளர்களையும் கொண்டுள்ள இத்தொகுதி ஓர் விவசாயப் பகுதியுமாகும்.

விவசாயிகளின் அரசு என்று தனக்குத்தானே புகழ்சூடிக்கொண்ட ஐ. மு. அரசு விவசாயத் தொகுதியிலே தோற்றதென்பதை நம்ப முடியுமா? முஸ்லிம் மக்களின் ஆதரவு என்றும் ஐ. மு. அரசுக்கே உண்டென்றும் பறை சாற்றிய அமைச்சர்களுக்கு, கணிசமான முஸ்லிம் வாக்காளர்கள் உள்ள தொகுதியிலே தோல்வி ஏற்பட்டதை ஏற்கத்தான் முடியுமா? மக்கள் அரசுக்கு கலாவெவ மக்கள் வழங்கிய தீர்ப்பை அங்கீகரிக்கலாமா? சிங்களப் பெரும்பான்மைப் பிரதிநிதிகளால் அமைக்கப்பட்ட ஆட்சிக்கு கலாவெவ வாழ் சிங்களப் பெரும்பான்மை மக்கள் இப்படி ஒரு முடிவை வழங்கலாமா?

கூடாது... கூடாது... கூடாது...என்றுதான் கூற வேண்டும். ஆனால் மக்களின் தீர்ப்பை மதியாதுவிடமுடியாதே!

"தோல்வி யாருக்கு" என நாம் ஆராய்வதன் மூலம் அடுத்த பொதுத்தேர்தலை நம்பிக்கையுடன் நோக்கலாம்.

சு. கட்சிக்கோ, ஐ. மு. அரசுக்கோ கலாவெவ தீர்ப்பு படுதோல்வி என்று ஒப்புக்கொள்ள முடியாது. ஏனெனில் அவர்களுக்கு இலங்கை வாழ் மக்கள் அனைவருமே அடுத்து வரும் பொதுத்தேர்தலிலே மிகப் பெரிய தீர்ப்பை வழங்க ஆவலுடன் உள்ளார்கள்.

மக்கள் அரசுக்கும் இது ஓர் தோல்வியல்ல. காரணம் மக்கள் அரசு என்று ஒன்றிருப்பதாக வாக்காளர்கள் எவரும் ஏற்றுக்கொள்ளவில்லையே. இல்லாத அமைப்புக்குத் தோல்வி ஏது?

தோல்விக்குச் சொந்தக்காரரை நாம் தேடியபோது பின் வருபவர்களுக்கே தோல்வியென வாக்காளர் உள்ளங்கள் உணர்ச்சியுடன் உணர்த்தின.

* மக்களின் ஆதரவையும், நம்பிக்கையையும் இழந்த ஐ. மு. அரசை கட்சி மாறி ஆதரித்திடும் திருவாளர்கள் அருளம்பலம், தியாகராசா, மார்ட்டின், தம்பிராஜா, முஸ்தபா, ராஜன் ஆகியோருக்கும் தோல்வி.

* அமைச்சர்கள் குமாரசூரியர், மஜீத், பதியுதீன் ஆகியோருக்கும் தோல்வி.

* துரையப்பா, வி[illegible]தன் போன்ற அடிவருடிகளுக்கும் தோல்வி.

* மன்னார் இடைத்தேர்தலில் போட்டியிடாமலே தங்களுக்கே வெற்றியென ஒப்பாரி வைத்த அனுரா, துரோகப்பா கோஷ்டிக்கும் தோல்வி!

மேற் கூறியோர்கள் தோல்வியடைந்த வேளையிலே காங்கேசன் துறையிலே அவர்கள் மேலுமொரு தோல்வியைச் சந்திக்கத் தயங்குவதில் மர்மமே இல்லை.

எனவேதான் மக்கள் கூறுகிறார்கள் விவசாயிகள் நிறைந்த தொகுதியான கிளிநொச்சியிலே தோல்வியை நீங்கள் தாங்கிக்கொள்ள மாட்டீர்கள். வாருங்கள் காங்கேசன்துறைக்கு தமிழினத்தின் ஏகப்பிரதிநிதியுடன் போட்டியிடுங்கள் ஐயா சூரியரே என்று...!

தோல்வி நிச்சயமென்றாலும் காரணம் கூறிடலாமே சுலபமாக. ஏனெனில் கிளிநொச்சியளவுக்கு காங்கேசன்துறை விவசாயப் பகுதியல்லவே என்று கூறி உங்களைத்தேற்றிக் கொள்ளலாமே...!

பாராளுமன்றத்தின் பெரும்பான்மையால் நல்லாட்சி நடாத்தமுடியாது. மக்களின் ஆதரவாலேயே நல்லாட்சி நடாத்தலாம் என்பதையே கலாவெவ அறிவுறுத்துகின்றது.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீருங்கள் நாடு முன்னேறும். இதுவே கலாவெவ தரும் பாடம்.

கண் திறக்குமா ஆட்சியினருக்கு?

—ரவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீலிக்ஸ் 'இசம்' தமிழனுக்கு விஷம்!

அன்பு நண்பா,

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட நேரத்திலும், அது சட்டமானதன் பின்பும்—அதாவது 1972மே 22க்குப் பின்பும் — தமிழர் கூட்டணியும் தமிழ் மக்களும் தொடர்ச்சியாகவும்விடாப்பிடியாகவும் எழுப்பிவருகின்ற உரிமைக்குரல்—நடத்திவருகின்ற கிளர்ச்சிகள்—சிறைச்சாலைகளிலே நம் இரத்தத்தின் இரத்தங்களான தமிழ் இளைஞர்கள் செய்து வருகின்ற தியாகங்கள்.—இப்போதுதான் ஓரளவுக்கு ஆட்சியாளரின் மனச்சாட்சியை மயிரிழை அளவிலாவது—தொட்டிருக்கிறது என்பதை அண்மையில் தேசிய அரசுப் பேரவையில் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா தெரிவித்திருந்த ஒரு கூற்று எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கிறது.

புதிய அரசியல் திட்டத்தை தமிழருக்கு கிடைத்துள்ள 'வரப்பிரசாதம்' என்று தியாகராசாவும், தமிழ் மக்களுக்கு எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டு விட்டதாக குமாரசூரியரும் மற்றும் துரோகப்பர், வி. பொன்னம்பலம் போன்ற ஆளுங்கட்சியின் குட்டிச் சாத்தான்களும், 'சிமோல்' மனிதர்களும் எலும்புத்துண்டுக்காக துரோகத்தனமாக ஈனஸ்வர ஓசையெழுப்பி, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தினை முறியடித்திட — திசை திருப்பிட முயன்று தமிழ் மக்களால் மூக்கறுபட்டுக் கிடக்கின்ற நேரத்திலே—தமிழர் கூட்டணி மட்டுமே தனித்து நின்று தமிழர்களின் உரிமைகள் அரசியல் சட்டத்தில் எழுதப்படவேண்டும்—தமிழர்கள் சம உரிமையுள்ள மனிதர்களாக வாழ வழிவகுக்கப்படவேண்டும் — அதற்கு முன்வைக்கிறோம் இதோ ஆறு அம்சத் திட்டம் என்று ஆறு அம்சத்திட்டமொன்றை முன் வைத்து — அத்திட்டமும் ஆட்சியாளரினால் அலட்சியப்படுத்தப்பட்டு விட்ட நிலையில்—தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக—சுதந்திரத்துக்காக இன்று குரலெழுப்பிக்கொண்டு வருகிறது!

இந்த நிலையிலேதான் தமிழர் கூட்டணியின் கோரிக்கை நியாயமானவைதான் என்பதை அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் அவர்கள் முதன் முதலாக தேசிய அரசப்பேரவையில் ஒப்புக்கொண்டே தீரவேண்டிய ஒரு நிலையை நம்முடைய உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கத்தின் தர்க்கரீதியான வாதம் சென்ற வாரம் ஏற்படுத்தி விட்டது!

நம்முடைய உடுவில் பா. உ. வின் திறமையான வாதத்துக்கு முன்னர் எவ்வகையிலும் சமாளிக்கமுடியாத அமைச்சர், ''தமிழர் கூட்டணி தமிழர்களின் உரிமைகளை அரசியல் சட்டத்தில் எழுதவேண்டும் என்று விரும்புகிறது. அது நியாயமற்றது என்று நான் கூறமாட்டேன். ஆனல் அதற்கேற்ற சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை;'' என்று 28-11-74ல் தேசிய அரசப்பேரவையில் கூறியிருக்கிருர்!

நண்பா, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எத்தனையோ எதிர்ப்பியக்கங்களை நடத்தி—தீர்மானங்களைநிறைவேற்றி அனுப்பி—தேசிய அரசப்பேரவையில் திரும்பத் திரும்ப நம்முடைய தலைவர்கள் இடித்துரைத்து—நம்முடைய இளைஞர்கள் எண்ணற்ற தியாகங்களைப் புரிந்து—சிறைச்சாலைகளில் எண்ணற்ற துன்பங்களை அனுபவித்து—தம்பி சிவகுமாரன்

## அரசியல் அரங்கம்

தன்னுடைய உயிரையே அர்ப்பணித்து—அதன் பின்னர்தான் சிங்கள ஆட்சியின் அமைச்சர் ஒருவருக்கு நம்முடைய கோரிக்கை நியாயமானதுதான் என்பதை — வேண்டா வெறுப்புடன் என்ருலும் — ஒப்புக்கொள்ளுகின்ற ஒரு மனேநிலை ஏற்பட்டிருக்கின்றது என்ருல்—அவ்வளவு தூரம் அதிகார வெறி—ஏகாதிபத்திய வெறி—ஆட்சியாளரின் கண்ணையும் கருத்தையும் மறைக்கின்ற சுதையாக மூடிவளர்ந்திருக்கிறது என்பதுதான் அர்த்தமாகும்!

தமிழர் கூட்டணியின் கோரிக்கை நியாயம் என்பதை ஒப்புக்கொண்டுள்ள அமைச்சருக்கு, அந்த நியாயத்தை வழங்குவதற்கு மட்டும் 'சூழ்நிலை' சரியில்லையாம்! 'சூழ்நிலை' சரிவரும்வரை தமிழ் மக்கள் காத்திருக்க வேண்டுமாம்!

நண்பா, இலவு காத்த கிளிபோல—தமிழ் மக்களும் தமிழர் கூட்டணியும் வாயை மூடிக்கொண்டு ''சூழ்நிலை'' வரட்டும் வரட்டும் என்று காத்திருந்து — முடிவில் ஏமாற்றமடைந்து—அழிந்தொழிந்துபோகவேண்டும் என்பதுதான் இவர்களது ஆசைபோலும்!

சிங்கள மக்களிடம் வகுப்புவாதம் இப்போது துளியும் இல்லையென்றும், அரசாங்கத்திலுள்ள சுதந்திரக் கட்சியும் சமசமாஜ, கம்யூனிஸ்ட்டுகளும் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க ஆவல்கொண்டுள்ளார்கள் என்றும் திட்டவட்டமாக கூறியிருக்கின்ற அமைச்சர் பீலிக்ஸ், தமது அதே வாயினல், அதே மூச்சில் தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்க சூழ்நிலை சரியில்லையென்றும் கூறுகிருர் என்ருல் ஒன்றுக்கொன்று முரண்பாடான இந்த வாதத்தின் அர்த்தம் தான் என்ன?

சிங்கள மக்களிடம் துளியும் வகுப்புவாதம் இல்லையென்று யாழ்ப்பாணத்தில் பிரதமரும், தேசியபேரவையில் பீலிக்ஸ் டயசும் கூறியிருப்பது உண்மையாளுல் — தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்குவேறு என்ன தடையிருக்க முடியும்?

சுதந்திரக் கட்சியும், சமசமாச, கம்யூனிஸ்டு கட்சிகளும் உண்மையிலேயே தமிழர்களின் உரிமைகளை வழங்குவதில் அக்கறை கொண்டிருக்குமானல் ஆட்சிக் கட்டிலில் வீற்றிருக்கும் அவர்களுக்கு தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கு யார் தடையாக இருக்க முடியும்?

நண்பா, தமிழர்களின் உரிமைகளை வழங்கினல் யூ. என். பி. வகுப்புவாதத்தை கிளப்பும் என்றும் ஆளுங்கட்சியினர் சால்ஜாப்புக் கூறிட முடியாது— ஏனெனில் அவர்களது கூற்றின்படிதான் சிங்களவர்களுக்கிடையே இன்றைக்கு வகுப்புவாதம் துளியும் கிடையாதே!

ஆட்சியாளர்களின் முன்னுக்குப் பின் முரண்பாடான இந்த விழல் நியாயம் எதைச் சுட்டிக்காட்டுகிறதென்ருல்—ஏதாவது நொண்டிச் சாட்டுக்களை—போலித்தனமான பொருந்தாத வாதங்களை கூறிக்கொண்டு—தமிழர்களின் உரிமைகளை அரசியல் சட்டரீதியாக வழங்காமல் காலத்தை ஓட்டிக்கொண்டு போகவே அவர்கள் உள்ளூர விழைகிறுர்கள் என்பதைத்தான்! இப்படிக் காலத்தை கடத்திவந்தால்—நாளாவட்டத்தில் தமிழர்கள் களைப்படைந்து சோர்ந்துவிடுவார்கள்—பின்னர் தங்கள் ஆசைப்படியே சர்வ சிங்கள பௌத்த அரசியல் சட்டத்தை எதுவித மாற்றமும் இன்றி அப்படியே வைத்துக்கொள்ளலாம் என்று மனக் கோட்டை கட்டிவருகிறுர்கள்!

நண்பா, சிங்கள மக்களிடையே நாம் சென்று எங்கள் கோரிக்கையிலுள்ள நியாயத்தை அவர்களுக்கு எடுத்துக்கூறவேண்டுமாம்! இதுவும் திருவாளர் பீலிக்சின் திருவாய் மொழிகளில் ஒன்று!

இந்நாட்டின் அரசியல் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், 1956ம் ஆண்டுக்கு முன்னர், இந்நாட்டிலுள்ள எல்லாச் சிங்களக் கட்சிகளும் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து அளிப்பதையே தங்கள் கொள்கையாக கொண்டிருந்தன. இந்தக் கொள்கையை சிங்கள மக்களும் அன்று ஏற்றுக்கொண்டிருந்தனர்! ஆனல் குறுக்கு வழியால் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக—என்று இந்தச் சிங்களக் கட்சிகள், சிங்களம் மட்டும் பௌத்தம் மட்டும் என்கிற நாட்டின் ஒற்றுமையை குட்டிச் சுவராக்கிய விஷ விதைகளை சிங்கள மக்களின் இதயங்களிலே தூவத் தொடங்கினுர்களோ—அன்றிலிருந்தே சிங்கள மக்களுக்கும் இனவெறியர்களாக—தமிழ் விரோதிகளாக மாறினுர்கள். அவர்கள் மாறினுர்கள் என்பதை விட சிங்களக் கட்சிகளால் மாற்றப்பட்டார்கள் என்பதே சரியானதாகும்!

எனவே நண்பா, சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கு எதிராக வகுப்புவாதத்தை விதைத்து வளர்த்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும்தான் அவர்களுடைய மனதிலிருந்து அதை அகற்றுவதற்கு முயலவேண்டுமே தவிர—அது தமிழர் கூட்டணியினுடைய வேலை அல்ல! தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளை மீட்பதற்கு சிங்கள மக்களுடைய உத்தரவைப் பெற வேண்டிய அவசியமெதுவுமில்லை!

இந்நாட்டின் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் நீடித்து நிலைத்து நிற்க வேண்டுமென்ருல்—'இலங்கை' ஒரே நாடாக தொடர்ந்து விளங்கிட வேண்டும் என்கிற ஆசை சிங்களத் தலைவர்களுக்கு இருக்குமானல்—சிங்கள மக்கள் மனதில் அவர்கள் விதைத்த பௌத்த சிங்கள ஏகாதிபத்திய மாயையை அகற்ற அவர்களே நடவடிக்கையெடுக்கட்டும்! தாங்கள் கக்கியதை தாங்களே உறிஞ்சியெடுக்கட்டும்! அது தமிழர்களின் வேலையல்ல!!

தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து தமிழர்களின் பிரதிநிதித்துவ நிறுவனமான தமிழர் கூட்டணியுடன் பேசமாட்டோம்—தமிழ்மக்களுடன் தான் நேரடியாக பேசுவோம் என்றும் வெட்டித்தனமாக பேசி வருகின்றனர் ஆளுங்கட்சியினர்!

எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும்சரி — அல்லது கம்யூனிஸ்ட் நாட்டிலும் சரி—முதலாளித்துவ நாட்டிலும் சரி, சோசலிச நாட்டிலும்சரி—இதுவரை யாரும் பின்பற்றியிராத—பின்பற்றிடமுடியாத— இத்தகைய ஒரு விதண்டாவாதத்தை இங்கு சிங்கள ஆட்சியினர் கூறுகின்றனர் என்ருல்—நான் முன்னர் குறிப்பிட்டதுபோல — ஏதாவது கூறிக் காலத்தையோட்டி—தமிழர்களின் உரிமைகளை வழங்காது தட்டிக் கழித்திடத்தான்! இதை தமிழினம் புரிந்துகொள்ள வேண்டும்!

ஆட்சியாளரின் போக்குக் கண்டு இன்றைக்கு இளைய தமிழ் சமுதாயம் பொறுமை இழந்துகொண்டுவருகிறது! ஐக்கிய இலங்கையில் நம்பிக்கை இழந்துவிட்டது! ஆட்சியாளர்களின் அதிகாரத் திமிர் மேலும் நீடிக்குமானல் — தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் விரைவில் கௌரவமான சமரசம் காண சிங்கள அரசு தவறுமானல் — பின்னர் பேச்சுவார்த்தை என்பதற்கே இடமில்லாத ஒரு கட்டம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் நிச்சயம் ஏற்பட்டே தீரும்!

எந்தப் பேச்சுவார்த்தைக்கும் நாங்கள் தயாராக இல்லை! எங்கள் தமிழ் ஈழத்தை சுதந்திர பூமியாக்குவதைத்தவிர அதற்குக் குறைந்த எந்த சமரசத்துக்கும் நாம் தயாரில்லை என்று தமிழினம் திட்டவட்டமாக அறிவிக்கவேண்டிய ஒரு சூழ்நிலையை நோக்கியே சிங்கள ஆட்சியாளரின் செயல் நம்மை இட்டுச் செல்கிறது. அந்த நாள் விரைந்து வந்திடவேண்டும் என்பதுதான் உள்ளபடியே எனது ஆசையுமாகும்!

உன் அன்புத் தோழன்

கோவை மகேசன்

# பணம் ஒதுக்குவதிலும் தமிழ் ஈழம் புறக்கணிப்பு!

''இந்த வரவுசெலவுத் திட்டத்தில் 198.7 கோடி ரூபா அபிவிருத்தி ஆக்கச்செலவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பணத்தைச் செலவுசெய்ய எந்த அடிப்படையில் ஒதுக்கீடு செய்திருக்கிருர்கள் என்பதை நாம் ஆராய வேண்டும்!

''இந்த நாட்டின் நிலப்பரப்புப்படி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஏழில் இரண்டு பங்கு நிலப்பரப்பைக்கொண்டவை. இலங்கை முழுவதினதும் விஸ்திரணம் 25,000 சதுர மைல். இதில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் சுமார் 7500சதுர மைல்களைக் கொண்டன. இந்த விதமாக நிலப்பரப்பு அடிப்படையில் பார்த்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு 58 அல்லது 59 கோடி ரூபா ஒதுக்கப்படவேண்டும். பாராளுமன்ற பிரதிநிதித்துவப்படி அபிவிருத்திக்கு செலவிடுவது என்ருல், வடக்கு கிழக்குக்கு 29கோடி ரூபா வரையில் ஒதுக்கப்பட்டிருக்கவேண்டும்!

''இதுவுமன்றி ஜனத்தொகை அடிப்படையில் பார்த்தாலும், இந்நாட்டில் வாழும் 127 இலட்சம்மக்களில், 16இலட்சம்மக்கள் வடக்கு, கிழக்கில் வாழ்கிருர்கள் — ஆகவே ஜனத்தொகைப்படி கூட எட்டில் ஒரு பகுதி அதாவது சுமார் 25கோடி ரூபா வடக்கு, கிழக்குக்கு ஒதுக்கப்படவேண்டும்!

ஆனல் இன்றைய வரவுசெலவு மதிப்பீட்டை ஆராய்ந்தால், வடக்கு, [illegible]க்கு அபிவிருத்திக்கு இருபதில் ஒரு பங்[illegible]ம் கூட ஒதுக்கப்படவில்லை!

—தேசிய பேரவையில் அ. தங்கதுரை பா. உ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## அடிப்படை நோய்!

தேர்தல் மூலம் தங்கள் பிரதிநிதியைத் தெரிவு செய்கின்ற அடிப்படை சனநாயக உரிமையை காங்கேசன்துறை தொகுதி மக்களுக்கு சென்ற 26 மாதங்களாக அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி எதுவித காரணமுமின்றி வீம்புக்காக மறுத்து வந்த அரசாங்கம்—இப்போது அந்த விதியை நீக்கியதன் மூலம் இடைத் தேர்தல்நடைபெறக்கூடிய ஒரு நிலையைதோற்றுவித்திருக்கிறது.

தமிழ் மக்கள் தொடர்ச்சியாக காட்டி வந்த வலுவான எதிர்ப்பும்— காங்கேசன்துறை இடைத் தேர்தலை நடத்த முன்வராததன் மூலம் தமிழ் மக்களின் அடிப்படை சனநாயக உரிமையைக்கூட சிங்கள அரசு மறுத்து வருகிறது என்கிற உண்மை தமிழர் கூட்டணியின் பிரசாரத்தின் மூலம் வெளிநாடுகள் எங்கும் தெரியவந்து—'சென்னை ஹிந்து' போன்ற உலகப் புகழ்பெற்ற ஏடுகள் அதுபற்றி எழுத முற்பட்டதுமே அரசாங்கத்தின் வீம்பைத் தகர்த்தெறிந்து—26 மாதங்களாக அது தமிழ் மக்களுக்கு வேண்டுமென்றே இழைத்து வந்த ஒரு அநீதியை துடைக்கும் சூழ்நிலையை உண்டாக்கியிருக்கிறது.

இதே போல சிறைச்சாலைகளில் ஆண்டுக்கணக்காகவும், மாதக்கணக்காகவும் விசாரணை எதுவுமின்றி தள்ளப்பட்டுக்கிடக்கும் எழுபதுக்கு மேற்பட்ட இளைஞர்களின் பிரச்சினை பற்றியும் ஒரு இறுதி முடிவெடுப்பதில் அரசாங்கம் அக்கறைகாட்டி வருவதாக செய்திகள் கூறுகின்றன!

நீதிதேவனையே கொன்றொழித்துவிட்டு—இந்தத் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக தான் இழைத்து வந்த—வருகின்ற பயங்கரக் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு அரசு நடவடிக்கையெடுத்து வருவது உண்மையானல்—காலங்கடந்தாவது அதற்கு இந்த மனிதாபிமானம் ஏற்பட்டிருப்பதை மெச்சுகிறேம்!

சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் பிரச்சினையில்—அவர்களுக்கு இரண்டு ஆண்டுகட்கு மேலாக இழைக்கப்பட்டுவந்த பயங்கரக் கொடுமைகளின் பின்னர்—இப்போதாவது அவர்களது பிரச்சினையின் மீது அரசு கவனம் செலுத்துகிறதென்றல்—அந்த விதத்தில் அரசின் கவனத்தை திருப்புவதற்கு யார் காரணமாக இருந்தார்கள்—எந்த சக்தி காரணமாக இருந்தது—என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்!

காங்கேசன்துறை இடைத்தேர்தல், சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் பிரச்சினை—ஆகியவற்றில் இது வரை காலமும் தமிழ் மக்களுக்கு இந்த அரசு காரணமின்றி இழைத்து வந்த அநீதிகளை, இப்போதாவது உண்மையிலேயே நீக்குவதற்கு நடவடிக்கையெடுக்குமானல்—அரசு தான்விட்ட பெருந்தவறைத்தானே திருத்திக்கொள்ளுகிறது என்று கூறலாமே தவிர—யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தமிழ் நாளேடுபோல இவற்றைப் பொங்கல் பரிசு என்று கூறி தமிழன் எவனாவது புளகாங்கிதமடைவதற்கு எதுவித நியாயமுமில்லை!

ஆனால், காங்கேசன்துறை இடைத்தேர்தலில் முன்வைக்கப்படவிருக்கும் அரசியல் அமைப்புச் சட்டப்பிரச்சினையும் தமிழ் இளைஞர்கள் சிறையிருக்க நேரிட்டிருப்பதும்—நோயின் அறிகுறிகளே தவிர நோயல்ல! இவைஅடிப்படைப்பிரச்சினைகளிலிருந்து எழுந்த கிளைப் பிரச்சினைகளே தவிர அடிப்படைப் பிரச்சினை இவையல்ல!

காங்கேசன்துறை இடைத்தேர்தலும், சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் பிரச்சினையும்தான் தமிழ் மக்களின் அடிப்படைப்பிரச்சினைகள் என்று அரசு கருதுமானல்—அது தன்னைத்தானே ஏமாற்றி தப்புக்கணக்குப்போட்டுக்கொள்ளுகிறது என்றே நாம் கூறுகிறேம்!

காங்கேசன்துறை இடைததேர்தலை தந்தை செல்வா ஏற்படுத்தவேண்டிவந்ததும்—தமிழ் இளைஞர்கள் சிறை செல்லவேண்டிவந்ததும்— இந்நாட்டுத் தமிழ்தேசிய இனத்தின் சுதந்திரம், சுயாதீனம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை முன்வைத்துத்தான்!

புதிய அரசியலமைப்பை தமிழ் மக்கள் நிராகரிக்கிறார்கள்; அவர்கள் தமிழ் ஈழத்துக்கு சுயநிர்ணய உரிமையையே கோரி நிற்கிறார்கள்; என்பதை வலியுறுத்தியே தந்தை செல்வா அவர்கள் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் போட்டியிடவிருக்கிறார்கள்!

காங்கேசன்துறை இடைத்தேர்தலை காலங்கடந்தாவது நடத்த முன்வந்துள்ள அரசாங்கம், இடைத்தேர்தலில் தமிழ் மக்கள் அளிக்கவிருக்கின்ற தீர்ப்புக்கு தலைவணங்கி, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் இனத்தின் மொழி, இன, பிரதேச, ஆட்சி உரிமைகளை ஒப்புக்கொள்ள முன்வரவேண்டும்!

இப்படிச்செய்தால் மட்டுமே தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீரும்! நாட்டில் அமைதி ஏற்படமுடியும்! இனங்களுக்கிடையே சௌஜன்யம் நிலவமுடியும்!

காங்கேசன்துறை இடைத்தேர்தலில் தமிழ் மக்கள் அளிக்கும் தீர்ப்புக்கு அரசு தலைவணங்கி தமிழினத்தின் உரிமைகளைவழங்கி—தமிழ்சமுதாயத்தின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணுமானல்—அடிப்படைப்பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமானல்—நாட்டின் ஒருமைப்பாடும் ஒற்றுமையும் தப்பிப்பிழைக்கும்!!

இதில் அரசு தவறுமானல்—நாடு சிங்களம், தமிழ் ஈழம் என்று இரண்டாக பிளவுபடுவதும் தவிர்க்கமுடியாததாகி விடும்!

# "ஏகாதிபத்தியத்தின் ஏவல் நாய்கள் என்று எம்மைத் திட்டினலும் இன விடுதலைப் போராட்டத்திலிருந்து இம்மியும் விலகோம்!

தத்துவத்தைப்பற்றியும் தமிழர்களைப்பற்றியும் பேசுகின்றபொழுது, இந் நாட்டிலேயிருக்கின்ற தமிழர்கள் தத்துவத்தைப்பற்றியோ வேறு எதைப்பற்றியோ சிந்திக்க அவர்களுக்கு இப்பொழுது நேரமில்லை. அவர்கள் தங்களுடைய நாட்டிலே சுதந்திர புருஷர்களாக வாழ வேண்டும்; தங்களுடைய மொழிக்கு இந்த நாட்டிலே உரிமை கொடுக்கப்படவேண்டும்; தங்களுடைய மொழிக்குக் கொடுக்கிற உரிமை பிறமொழிக்கு கொடுத்த உரிமையைப் போல் இருக்கவேண்டும்; தங்களுடைய மதத்துக்கு மதிப்புக் கொடுக்கப்படவேண்டும் என்பதில்தான் தங்களுடைய முழுச் சிந்தனையையும் திருப்பி இருக்கிறார்கள்.

எங்களைப்பற்றி நீங்கள் துவேஷிகள் என்று கூறினலும் சரி—வகுப்புவாதிகள் என்று கூறினலும் சரி—ஏகாதிபத்தியக் காவல் நாய்கள் என்று கூறினலும் சரி நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. எங்களுடைய மொழிக்கு இந்த நாட்டிலே சம உரிமை கொடுக்கப்பட வேண்டுமென்பதில்தான் எங்கள் முழுக்கவனமும் ஈர்க்கப்பட்டுள்ளது. இந்நாட்டிலே தமிழ் மக்களும் சிங்கள மக்களைப் போலச் சுதந்திர புருஷர்களாக உரிமையோடு வாழவேண்டுமென்றுதான் நாங்கள் சிந்தித்துக்கொண்டிருக்கிறேம்.

# இழந்த உரிமைகளை மீட்பதற்காக எவ்வகையில் போராடவும் நாம் தயார்!"

### தேசிய அரசப் பேரவையில் மூதூர் தங்கத்துரை சங்கநாதம்!

"மொழிக்குச் சம உரிமை, மதத்துக்கு ஒரே இடம்—சிங்களவர்களைப் போலத் தமிழர்களும் மதிக்கப்படுவார்கள்—என்று கூறிய அரசியல் தலைவர்களில் ஒருவரான கௌரவ என். எம். பெரேரா அவர்கள் இங்கே இருக்கின்றார். அவர் இப்பொழுது இந்தக் கொள்கையைக் கைவிட்டுவிட்டாரோ எனக்குத் தெரியாது. யாழ்ப்பாணத்திற்குச் சென்ற பொழுது தமிழர்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொண்ட அமைச்சர்களில் கலாநிதி என். எம். பெரேரா அவர்களும் ஒருவர்.

என். எம். பெரேரா:— நான் எப்போ அங்கே போனேன்; எங்கே பேசியது?

திரு. ஏ. தங்கத்துரை:— நீங்கள் யாழ்ப்பாணத்தில் அப்படிக் கூறினீர்கள்!

என். எம். பெரேரா:— பல வருடங்களுக்கு முன்னர்!

திரு. வி. தர்மலிங்கம் உடுவில்:— மூன்று பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டி இருப்பதாக நீங்கள் கூறியதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

கலாநிதி என். எம். பெரேரா:— அண்மையிலா?

திரு. தர்மலிங்கம்:— ஆம், அண்மையில்.

திரு. தங்கத்துரை:— ஆனல் அதை உங்களுடன் இருந்த வட்டுக்கோட்டைப் பிரதிநிதி மறுத்திருந்தார்!

என்.எம்.பெரேரா:—ஹன்சாட்டை கொண்டு வாருங்கள்.

திரு. தங்கத்துரை:— அது ஹன்சாட்டில் இல்லை!

திரு. தர்மலிங்கம்:— நீங்கள் யாழ்ப்பாணம் வந்திருந்த போது அப்படிக் கூறினீர்கள்!

என். எம். பெரேரா:- எப்பொழுது?

திரு. தர்மலிங்கம்:- 1973ம் ஆண்டில்!

என். எம். பெரேரா:- அதன் பின்னர் எத்தனையோ விடயங்ள் நடந்துமுடிந்து விட்டன!

திரு. தங்கத்துரை:- எங்களுடைய நிலைமையை நீங்கள் நன்ருக ஆராய்ந்து பார்க்கவேண்டும். நாங்கள் இந்த நாட்டிலே எப்படி ஓர் அடிமை இனமாக மாற்றப்பட்டு வந்திருக்கிறேமென்பதை நீங்கள் நன்ருக ஆராய வேண்டும்.

1956ஆம் ஆண்டிலே இந் நாட்டிலேயிருக்கின்ற தமிழ் பேசும் மக்களின் மொழி [illegible] நாட்டின் அரசகருமமொழி



யாக—ஆட்சி மொழியாக—அல்லது தேசியமொழியாக மதிக்கப்படுவது மறுக்கப்பட்டது. 1956ஆம் ஆண்டிலே சிங்கள மொழி இந் நாட்டின் அரசகரும மொழியாக—ஆட்சி மொழியாக—தேசிய மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பொழுது இந்நாட்டிலேயிருக்கின்ற மூன்றிலொருபகுதியினரான தமிழ் மக்களுக்கு மொழியுரிமை இந்நாட்டில் மறுக்கப்பட்டுவிட்டது.

ஓர் இனத்தின் மொழிக்கு அந்த நாட்டிலே சரியான இடம் கொடுக்காவிட்டால் அவ்வினத்தை அழித்தொழிக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை யெடுக்கப்படுவதென்பதுதான் அதன் அர்த்தமாகும்.

1956ஆம் ஆண்டு சிங்களத்தை ஆட்சிமொழியாக்கச் சட்டம் கொண்டு வந்தீர்கள். இச்சட்டம் கொண்டு வரப்பட்டு 18 வருடங்களாகியுங்கூட இச்சட்டத்தினல் உருவான மொழிப் பிரச்சினையை சரியான முறையில் தீர்த்து வைக்க எத்தகைய முயற்சியும் செயற்படுத்தப்பட்டதாகத்தெரியவில்லை.

1972ம் ஆம் ஆண்டிலே புதிய அரசியலமைப்பில் பௌத்தத்துக்கு முதலிடம் கொடுத்து இந்நாட்டிலிருக்கும் பிற மதத்தவர்களுக்கு அவமரியாதை இழைத்து விட்டீர்கள். அரசியலமைப்பிலே மற்ற மதங்களுக்கு எந்த இடத்தைக்கொடுத்திருக்கிறீர்கள்? மொழி அடிப்படையில், மத அடிப்படையில், இன அடிப்படையில் மற்றவர்களை ஒதுக்குகிறீர்கள். தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழும் பகுதியாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருக்கும் நிலங்களை என்ன செய்திருக்கிறீர்கள்?

1952ஆம் ஆண்டு தொடக்கம் திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் அவற்றைச் சிங்களப் பிரதேசமாக்கி வருகிறீர்கள். தமிழ்ப் பகுதிகள் சிங்களப் பகுதிகளாக மாற்றப்பட்டு அவ்விடங்களில் தமிழர்களுடைய பிரதிநிதித்துவங்கூட மறுக்கப்படுகிறது. திருகோணமலை மாவட்டத்தில் மூன்றில் ஒரு பகுதியினர் சிங்களவர்களாக இருக்கிறார்கள். திட்டமிட்ட குடியேற்ற மூலம் திருகோணமலையைச் சிங்களப் பிரதேசமாக மாற்றி வருகிறார்கள். மற்றப் பிரதேசங்களிலே தமிழர்கள் வாழ்கிறார்களே, அங்கே அவர்களால் எப்படி காணி வாங்கமுடியும், அவர்களுக்கு இடங்கொடுக்கிற பொழுது ஏன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களவர்கள் குடியேறக் கூடாது என்று சிலர் கேட்கிறார்கள்.

அவர்களுக்கு ஒன்று கூறுவேன். சிங்கள மக்கள் தாங்களாகவே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வந்து நிலங்களை மற்றவர்களிடமிருந்து வாங்கிக் குடியேறுவதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனல், அரசாங்கம் திட்டமிட்டுக் குடியேற்றத் திட்டத்தின் மூலம் அவர்களை அங்கே குடியேற்றி பாரம்பரியமாக தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்களில் அவர்களைச் சிறுபான்மையினராக்குவதைத்தான் நாங்கள் கண்டிக்கின்றேம். ஆகவேதான் அந்தப் பகுதியிலே குடியேற்றத் திட்டங்களை அமைக்கவேண்டாமென்றும் அப்படி அமைத்தால் அங்கே தமிழர்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்றும் கேட்கின்றேம்.

இப்படியாக மத அடிப்படையிலும் மொழி அடிப்படையிலும் தமிழ் மக்களை ஒதுக்குகிற நீங்கள் உயர் கல்வியிலும் அவர்களை ஒதுக்கியிருக்கிறீர்கள். எங்களுடைய மாணவர்கள் இன்று உயர் கல்வி பெறமுடியாத நிலைக்கு ஆக்கப்பட்டிருக்கிறார்கள். பாடசாலைகளுக்கு தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் அனுப்பப்படுவதில்லை. தேவையான உபகரணங்கள் அனுப்பப்படுவதில்லை. இருக்கும் வசதிகளைக்கொண்டு அவர்கள் மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் படித்து முன்னேறிய போதுகூட அவர்களுக்கு உயர் கல்வி பெற அனுமதி மறுக்கப்படுகிறது. மாவட்ட அடிப்படையில் உயர் கல்வி பெற மாணவர்களைத் தெரிந்தெடுக்கும் முறை மூலம் தகுதிவாய்ந்த பலர் உயர் கல்வி பெறமுடியாத நிலைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணப் பகுதியிலேயிருக்கும் தமிழ் மாணவன் 250புள்ளிகளை எடுத்தால்தான் விஞ்ஞானப் படிப்புக்குச் சர்வகலாசாலை செல்ல

—5-ம் பக்கம் பார்க்க.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# “சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமதர்ம தமிழ் ஈழக் குடியரசு”

## தமிழ் இளைஞர் பேரவையின் இலட்சியம் பிரகடனம்!

தமிழ் மக்களின் பாரம்பரியத்தாயகமாகிய வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமதர்மத் தமிழ் ஈழக் குடியரசொன்றை நிலைநாட்டுவதையே தனது இறுதி இலட்சியமாகக்கொண்டு தமிழ் இளைஞர் பேரவை செயற்படவிருக்கிறது.

தமிழர் கூட்டணியின் கொடியாகிய உதயசூரியன் கொடியை தமிழ்ஈழத்தின் தேசியக் கொடியாக ஏற்றுக்கொண்டுள்ள இளைஞர் பேரவை மஞ்சள் நிற பின்னணியில் சிவப்பு நிறத்தில் ஏரும் ஈட்டியும் பொறிக்கப்பட்டுள்ள கொடியை தனது இயக்கக்கொடியாக உருவாக்கியுள்ளது.

சென்றவார இறுதியில் முருங்கனில் நடைபெற்ற தமிழ் இளைஞர் பேரவைகளின் இணைப்புக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இது சம்பந்தமாக தமிழ் இளைஞர் பேரவைச் செயலாளர் திரு. அ. வரதராசன் சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

1974ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ம் திகதி தொடக்கம் 30ம் திகதிவரை முருங்கனில் நடைபெற்ற சகல மாவட்டங்களினதும் கீழ்க்காணும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

(1) தமிழன் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழத் தமிழனைத் தமிழனே ஆளுவதற்காக ஈழத்தின் வடக்கு கிழக்கு மாகாணங்களாகிய தமிழர்களின் பாரம்பரிய பூமியைச் சுயநிர்ணய உரிமையுள்ள சாதிமத இன பேதமற்ற சமதர்மத்தமிழீழக் குடியரசாக நிலைநாட்டல்.

(2) நாம் நிலைநாட்டும் குடியரசை மக்களாட்சிச் சமவுடைமைக் குடியரசாக விளங்க வைத்தல்.

(3) ஈழத் தமிழர்களின் உள்ளங்களில் நிறைவுபெற்றுள்ள கொடியாகிய சிவப்பு நிறத்தில் மஞ்சள் நிற உதய சூரியன் பொறித்த கொடியைத் தமிழீழத்தின் தேசிய கொடியாகக் கொள்ளுதல். அந்தக் கடமையை நிறைவேற்றப்போகும் நாம் மஞ்சள் நிறத்தின் மேல் சிவப்பு நிற ஏரும் ஈட்டியும்பொறிக்கப்பட்ட கொடியை எமது இயக்கத்தின் கொடியாக கொள்ளுதல்.

மஞ்சள் நிறம் மங்கல வாழ்வையும், சிவப்பு நிறம் எமது தியாகத்தையும், ஏர் எமது உழைப்பையும்பொருளாதார முன்னேற்றத்தையும் ஈட்டி எமது சக்தியையும் திறமையையும் நெஞ்சுறுதியையும் குறிக்கும்.

(4) எமது இயக்கத்தை நல்லதொரு நிர்வாகத்தின் கீழ் கட்டுப்பாடான இளைஞர்களைக்கொண்டு கட்டுக்கோப்புடன் வளர்க்கவேண்டும் என்ற நோக்குடன் ஒரு அமைப்புச் சட்டம் வரையப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

(5) தற்போதைய இலங்கையின் அரசியல் அமைப்பின்கீழ் இருக்கும்வரை தேர்தல் காலங்களில் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதை முடிவு செய்வதற்காகத் தமிழர் கூட்டணியுடன் கலந்தாலோசிப்பதற்கு ஏழு பேரைக் கொண்ட ஒரு குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. அக்குழுவில் அ. வரதராசன், சு. க. மகேந்திரன், பொன் மதிமுகராசா, கனக மனோகரன், தங்க மகேந்திரன், ச. ஜெயராஜா, த.ம. பீற்றர் கலன் ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

(6) 1975ம் ஆண்டு தை மாதம் 22ம் திகதி தொடக்கம் 28ம் திகதி வரைக்கும் தமிழீழத்தின் ஆறு மாவட்டங்களிலும் கொழும்பிலும் எழுச்சிவாரம் கொண்டாடப்படும். அத்துடன் இந்நாட்களில் எமது இயக்கத்தின் இரண்டாவது ஆண்டு பூர்த்தி விழாவையும்கொண்டாடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(7) எமது இயக்கத்தின் தலைமை செயலகத்தை வவுனியாவில் அமைப்பதெனவும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் கிளைக் காரியாலயங்களை அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

---

## கொழும்பில் மனித...

—1-ம் பக்கத் தொடர்

சேகரா, காமினி திசநாயகா ஆகியோர் உரையாற்றுகின்றனர். கருத்தரங்குக்கு சட்டத்தரணி எல். ஏ. ரி. வில்லியம்ஸ் தலைமை தாங்குகிறார்.

**யாழ்நகரில்...!**

மனித உரிமை நாள் யாழ் றிம்மர் மண்டபத்தில் 10-12-74 மாலை 4 மணிக்கு கொண்டாடப்படுகிறது. திரு. கு. நேசையா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், ஈழநாடு ஆசிரியர் திரு. எம். சபாரத்தினம், சி. கதிரவேற்பிள்ளை பா. உ. ஆகியோர் பேசுகின்றனர்.

---

## 1958ல் தமிழர் மீது...

—1-ம் பக்கத் தொடர்

யில் எழுப்பியகேள்வியொன்றுக்கு பதிலளித்த திரு. லக்ஸ்மன் ஜெயக்கொடி, ''மஹியங்கனையிலும், பின்னர் பாணந்துறையிலும் மற்றும் சில இடங்களிலும் சிங்கள—முஸ்லிம் கலவரங்கள் இடம் பெற்றிருக்கின்றன. இவற்றிற்கு ஸ்தல பிரச்சினைகள் காரணமா அல்லது திட்டமிட்ட முயற்சியா என்பதை அரசு ஆராய்ந்து வருகிறது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

---

## யாழ்ப்பாணத்....

—1-ம் பக்கத் தொடர்

சிங்கள மக்கள் சிலரை இரவோடிரவாக அந்நிலத்தில் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றதாக அறிகிறோம். சட்டவிரோதமான இச் செயல் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது. பேராதனை வளாகத்திலோ, கொழும்பு கட்டுபெத்தை போன்ற வேறு எந்த இடத்திலுமோ, யாருக்கும்குடியேற்றத்துக்கு நிலம் கொடுக்க எண்ணாத அரசு பல இலட்சம் நிலமற்ற மக்கள் வாழும் யாழ்ப்பாணத்தில் ஓர் சிங்களக் குடியேற்றத்தை உருவாக்குவதை நாம் பலமாக ஆட்சேபிக்கிறோம்.

யாழ் வளாகம் சிங்களக் குடியேற்றத்துக்கு ஒரு வழி என்ற பேராசிரியர் குறாசின் கூற்று எவ்வளவு உண்மை [illegible] இச் செயல் நிரூபிக்கின்றது இச்செயல் நாட்டின் காணி அபிவிருத்திச் சட்டத்துக்கும் முரணானது. இச்செயலை உடன் நிறுத்துமாறு அரசாங்கத்தை தமிழர்கூட்டணி கோருகின்றது.

---

## “புதுமை நெஞ்சங்களின்”

### சிறுகதை-விமர்சக அரங்கு

இன்று ஞாயிற்றுக்கிழமை (8-12-74) திருக்கோணமலை திருமுருகானந்த சங்க (முத்துக்குமாரசுவாமி கோவிலடி) கட்டிடத்தில் ‘புதுமை நெஞ்சங்கள்’ கலை-இலக்கிய விமர்சககுழுவின் சிறுகதை விமர்சக அரங்கு இடம் பெறும். திரு. அருள் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இவ்வரங்கினில் பிரபல எழுத்தாளர்களும் — விமர்சகர்களும் கலந்து சிறப்பிக்க இருக்கிறார்கள்.

---

## சென்னையில் சஞர்...

—1-ம் பக்கத் தொடர்

மு. க. பொதுச்செயலாளர் திரு. ஏ. எஸ். மணவைத் தம்பியை தலைவராகக் கொண்ட குடிபெயர்ந்தோர் நல்வுரிமைச் சங்கம், தமிழர் பாதுகாப்புப் பேரவை உட்பட பல்வேறு பொது நல மன்றங்கள் இவற்றில் பங்கு பற்றுகின்றன.

---

## தமிழ் இளைஞர் பேரவை கொழும்புக் கிளை

தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளை 1-12-74ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. துவக்கக் கூட்டத்தில் பேரவைச் செயலாளர் அ. வரதராசனும் பங்குபற்றினர். பின்வருவோர் நிர்வாகிகளாகத தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. ஆ. ரகுபதி பால சிறீதரன், செயலாளர் நா. சந்திரமோகன், பொருளாளர் மு. தயாபரசிங்கம், க. செல்வக்குமார், க. அமுதன் ஆகியோர் உட்பட ஒரு செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

---


### சுதந்திரன் சந்தா விபரம்

ஓராண்டு—ரூபா 30-00
அரையாண்டு '' 15-00

அனுப்பவேண்டிய முகவரி:—

நிர்வாகி,
சுதந்திரன்
[illegible]


---

## இரங்கல்!

தமிழரசுக் கட்சித் தலைவர் நாவலரின் அருமை மாமனாரும்—தமிழரசு மாதர் முன்னணிச் செயலாளரும் நாவலரின் துணைவியாருமான திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் தந்தையாருமான திரு. வல்லிபுரம் அவர்கள் காலமானதறிந்து வருந்துகிறோம்!

தந்தையை பறிகொடுத்து வருந்தும் திருமதி அமிர்தலிங்கம் அவர்களுக்கும் மாமனாரை இழந்து வருந்தும் நாவலருக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த இரங்கலைத்தெரிவித்துக்கொள்ளுகிறோம்!

—ஆசிரியர்.

அச்சுவேலியைச்சேர்ந்தவரும் தமிழர் கூட்டணி ஆதரவாளரும், தமிழ் காங்கிரஸ் பிரமுகருமான சட்டத்தரணி திரு. தா. குணரத்தினம் அவர்கள் அண்மையில் காலமானர். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—ஆர்.

---

## ஏகாதிபத்தி...

—4-ம் பக்கத் தொடர்

முடியும். ஆனல் ஒரு சிங்கள மாணவன் 220 புள்ளிகள் எடுத்தால் சர்வகலாசாலையில் சேரக்கூடியதாக இருக்கிறது. கல்வி வசதியைப் பொறுத்த அளவில், தமிழ்ப் பிரதேசத்துக்குச் சரியான வசதிகளை அளிக்க மறுத்துவிட்டு, கஷ்டங்களுக்கு மத்தியில் படித்து முன்னேறுபவர்களைக்கூட இனரீதியில் பிரித்து அவர்களுக்கு இடம் கொடுக்காமல் இருக்கிறீர்கள்.

இப்படித்தான் எமது இளைஞர்களை விரக்தி அடைந்த நிலையில் வைத்திருக்கிறீர்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் இல்லை. அவர்களுக்கு உயர் கல்வி இல்லை. அவர்கள் எல்லாத் துறைகளிலும் ஒதுக்கப்படுகிறார்கள்.

1949இல் இந்த நாட்டு மலையக மக்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டார்கள். அவர்களுடைய வாக்குரிமையைப் பறித்தீர்கள். 1949 இல்தான் தமிழர்களை நீங்கள் இந்த நாட்டிலே கூறுபோட்டீர்கள். இந்த நாட்டுத் தமிழர்கள் ஒன்றாக வாழக்கூடாது என்று திட்டங்களைத் தீட்டினீர்கள். வாக்குரிமை பறிக்கப்பட்ட அந்த மக்களை இன்று ஒவ்வொருவராகச் சாகடித்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

நாங்கள் நாட்டை அமைத்து எங்களை நாமே ஆண்டவர்கள். 1833ஆம் ஆண்டுக்கு முன்பு இந்த நாட்டிலே ஒரு தனியாட்சியை நடத்தியவர்கள் தமிழர்கள். ஏன் தமிழர்களுக்கு இந்த நாட்டிலே உரிய ஓர் இடத்தைக் கொடுக்க நீங்கள் மறுக்கிறீர்களா? இந்த நாடு சுபிட்சமடையவேண்டுமென்ருல் இந்த நாட்டிலேயிருக்கின்ற ஒவ்வொரு மனிதனும் சமத்துவமாக வாழவேண்டும். தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழத் தமிழ் மக்களின் உரிமைகளை நீங்கள் வழங்கவேண்டும்.

இந்தஉரிமைகளைக்கொடுக்கத் தவறினல் இந்த உரிமைகளைப்பெறுவதற்கு எந்த வகையிலேனும் போராடி எங்களுடைய உரிமைகளை நிலைநாட்ட நாங்கள் தவறமாட்டோம்.

ஆகவே, எங்களுடைய உரிமைகளைக் கொடுங்கள் என்று கேட்கிறோம். அவ்விதம் தராவிட்டால் எந்த வழியிலும் போராடிப்பெற ஆயத்தமாக இருக்கிறோம்.

---

## சிங்களவரை....

—1-ம் பக்கத் தொடர்

ளர்களின் பரிதாப நிலையை சுட்டிக்காட்டிய போது, இடையில் குறுக்கிட்ட நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா பின்வருமாறு கூறியிருக்கிறார்:—

“உங்களுக்கு எல்லா வசதிகளும் இருக்கின்றனதானே! You are much better off than the Sinhalese. what are you talking about? There is prosperity in Jaffna”(சிங்களவர்களிலும் பார்க்க நீங்கள் அதிக வசதிகளுடன் இருக்கிறீர்கள்! நீங்கள் என்ன பேசுகிறீர்கள்? யாழ்ப்பாணத்தில் செல்வச் செழிப்பு இருக்கிறது.)

—தேசிய பேரவை குறிப்பேடு பந்தி 1717, (22—11—74.)

அது மட்டுமன்றி வரவு செலவுத்திட்ட விவாதத்துக்கு பதிலளித்துப் பேசும் போது—Personally, I do not Think you have any Problems. (உங்களுக்கு எந்தப் பிரச்சினையுமிருப்பதாக தனிப்பட்ட முறையில் நான் கருதவில்லை!) என்று இந்த முன்னாள் சம அந்தஸ்து வீரர் கூறியிருக்கிறார்,

1973ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தபோது தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமலிருப்பதாக நிதியமைச்சர் கூறியிருந்ததை உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் அவரது கவனத்துக்குகொண்டுவந்தபோது அவர் கூறிய மறுமொழி என்ன தெரியுமா?

“A lot of things have happened since then!” (அதற்குப் பின் எத்தனையோ காரியங்கள் நடந்துவிட்டன!) என்பதுதான்!

சென்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது, யாழ்ப்பாணத்தில் அரிசி ஒரு கொத்து ரூபா 15-00 வீதம் விற்கப்படுவதை சுட்டிக்காட்டி நகை நட்டுக்களை அடைவு வைத்தும் விற்றும் யாழ்பபாண மக்கள் அரிசி வாங்குகிறார்கள் என்று கூறியபோது — யாழ்ப்பாண மக்களிடம் பணம் இருக்கிறதுதானே; அவர்கள் வாங்கட்டுமே என்று வகுப்புவாத “நக்கல்” அடித்தவர் இதே டாக்டர் என். எம். பெரேராதான் என்பதை தமிழ் மக்கள் இதற்குள் மறந்திருக்கமாட்டார்கள்.

---


### திருவெம்பாவை,
### திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை

15 மில்க் வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை என்ற புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சுவை நிறைந்த சுற்றுலா (iii)

“காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் உவகை பொங்கிடும் முகத்தினராய் காலை உணவுடன் எமக்காக வழிமேல் விழிவைத்துக்காத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது அங்குதான் போய்க்கொண்டிருக்கிறோம்!”

—இவ்வாறு பசியால் வாடிக் காணப்பட்ட டாக்டர் ‘மார்’ அவர்களிடம் நான் கூறியபோது “அப்படியா? மெத்தச் சந்தோஷம். முதலில் சாப்பிட வேண்டும்!” என்றார் அவர்.

வழியே சீமெந்து தொழிற்சாலையை பேருந்தில் இருந்தபடியே வெளிநாட்டு அறிஞர்கள் பார்வையிட்டனர்.

டாக்டர் கெலருக்கு ஏதோ சிறிது சந்தேகம் தோன்றியது. அவர் என்னிடம் கேட்டார்:-

“ஆமாம், தமிழர்களை சிங்கள அரசாங்கம் புறக்கணிப்பதாக சொல்கிறீர்களே! தமிழ்ப்பகுதியில் இந்தத் தொழிற்சாலையை கட்டித் தந்திருக்கிறதே! இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?”

“இலங்கைக்கு சுதந்திரம் வந்ததற்கு அடுத்த சில ஆண்டுகளுக்குள் கட்டப்பட்ட தொழிற்சாலை இது. தமிழ் மக்களையும் ஓரளவு அனுசரித்து நடக்கவேண்டும் என்ற எண்ணம் சிங்களவர்களுக்கு இருந்த காலத்தில் இத்தொழிற்சாலை கட்டப்பட்டது; அதுவுமன்றி சீமெந்துக்கான மூலவளமும் இங்கேயே உண்டு. இப்படி இரண்டு மூன்று தொழிற்சாலைகளை மட்டுமே நீங்கள் தமிழ் ஈழத்தில் காணமுடியும். 1956ம் ஆண்டுக்கு பின்னர் தமிழ் ஈழத்தில் புதிதாக எந்தவொரு தொழிற்சாலையுமே நிர்மாணிக்கப்படவில்லை. நீங்கள் பார்க்கிறீர்களே இந்த சீமெந்துத் தொழிற்சாலை, இதற்கு இரண்டாவது சூளையைக் கூட இங்கு ஆரம்பிப்பதற்கு மறுத்து தெற்கே கொண்டு போய்விட்டார்கள்! வெளிநாடுகளிலிருந்து உதவியாக இலங்கைக்கு கொடுக்கப்படும் பணம் முழுவதும் தென்னிலங்கைக்கே போகிறது—வடக்கும், கிழக்கும் வகைதெரியாமல் வாடுகிறது!”

இவ்வாறு நான் அவருக்கு ஒரு நீண்ட ‘லெக்சர்’ அடித்தேன். வலுவில் கிடைத்த ஒரு வாய்ப்பை இழப்பதற்கு எப்படிஎனக்கு மனம் வரும்?

“அப்படியா? உங்கள் உணர்ச்சிகளை மதிக்கிறேன்” என்று பேராசிரியர் கெலர் அவர்கள் கூறவும் விருந்தினர் விடுதி வந்துசேரவும் சரியாக இருந்தது.

காங்கேசன்துறைசீமெந்து தொழிற்சாலை ஊழியர்கள் அகமும் முகமும் மலர்ந்திட, பூரண கும்பங்களுடன் மங்கள விளக்கேற்றி எம்மை வரவேற்றனர்.

அவர்கள் தந்த இடியாப்பத்தையும் கட்டித் தயிரையும் என்றுமே மறக்கமுடியாது. யாழ்ப்பாண விருந்துகளின் போது தயிரையே காணமுடியவில்லையே என்று ஒரு முறை என்னிடம் குறைப்பட்ட வெளிநாட்டுப் பேராளர் ஒருவர் ஆனந்தமாக தயிரைச் சுவைத்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்ததைக் கண்டேன்.

இந்த விருந்தின்போதுதான் — டெல்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் சாலை இளந்திரையன் அவர்களும், டாக்டர் சாலினியாரும் வந்துவிட்டார்கள் என்கிற இனிப்பான சேதியும் கிடைத்தது.

சேதி மட்டும் என்ன? இதோ அவர்களிருவரும் எங்களுடன் காலை விருந்துண்ண வந்து சேர்ந்தும் விட்டார்கள்! சாலையாரும் நானும் அதுவரை உணர்ச்சிபூர்வமாக மட்டுமே நெருங்கிய நட்புக்கொண்டிருந்தோம். அவரை நானும் என்னை அவரும் நேருக்கு நேராக கண்டு முதன்முதலாக அளவளாவிக்கொண்டது இந்த விருந்தின்போதுதான்!

ஈழத்தமிழர்களின் விடுதலை வாழ்வில் நிரம்ப அக்கறையும் ஆர்வமும் கொண்டுள்ள டாக்டர் சாலை இளந்திரையன் அவர்களும், அவரது துணைவியார் சாலினி அம்மையாரும் மாநாட்டுக்கு வந்துசேர்ந்துவிட்டார்கள் என்றசேதி காட்டுத்தீபோல தமிழ் மக்கள் மத்தியில் பரவியதும் அவர்கள் அடைந்த மகிழ்வுக்கும் குதூகலத்துக்கும் அளவே இல்லை!

நான்தான் ‘கோவை மகேசன்’ என்று என்னை நானே அறிமுகப்படுத்திக்கொண்டபோது, என்னிரு கைகளையும் நட்புணர்வுடன் பற்றிக்கொண்ட டாக்டர் சாலையார், “இங்கொரு கோவை அங்கொரு சாலை!” என்று கூறிக்கொண்டார்.

“ஈழத்தமிழர்களுக்கும் இந்தியத் தமிழர்களுக்கும் நீங்கள்தான் சாலை!” என் [illegible] என்னுடன் [illegible] துணைவியாரை அவருக்கு அறிமுகப்படுத்திவைத்தபோது— ‘ரொம்ப பொல்லாத வரம்மா உங்கள் கணவர்! என்றார் நகைச்சுவையுடன்!

டாக்டர் சாலையுடன் பேசிக்கொண்டிருந்தால் பொழுதுபோவதே தெரியாது. ஏனெனில் நகைச்சுவை நிறைந்தது அவரது பேச்சு.

காங்கேசன்துறைசீமெந்து தொழிற்சாலை ஊழியர்களின் காலை விருந்துக்கு அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் துணைத்தலைவர்

**கோவை-மகேசன்**

பேராசிரியர் ஜெனட் அவர்களும் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் நன்றிதெரிவித்துப் பேசிய பின்னர் தமிழாராய்ச்சிமன்ற இலங்கைக் கிளையின் தலைவரான பேராசிரியர் வித்தியானந்தனின் பிறந்த ஊராகிய மாவிட்டபுரம் நோக்கி நாம் புறப்படுகிறோம்.

காங்கேசன்துறை மக்களும் காங்கேசன்துறை பட்டின சபையுமாகச்சேர்ந்து தமிழ் அறிஞர்களுக்கு அளித்த குதூகால வரவேற்புப் பற்றியும், தந்தை செல்வா தலைமையில் காங்கேசன்துறை வாடிவீட்டில் காங்கேசன்துறை மக்கள் அளித்த விருந்துபசாரத்தையும் நான் பின்னர் ஒருமுறை எழுதவிருக்கிறேன் — ஆதலால் இப்போது சுற்றுலாப் பொறுப்பாளர் போட்டிருந்த திட்டப்படியே இக்கட்டுரைத்தொடரையும் கொண்டுசெல்கிறேன்!

தமிழகத்துக் கோவில்களுக்கு இணையாக தலைநிமிர்ந்து வானுற ஓங்கி நிற்கும் ராஜகோபுரத்துடன் கூடிய மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலடியில் ஊர் மக்கள் திரண்டு நின்று எங்களை வரவேற்க காத்து நின்றனர். சுற்றுலா பேருந்து வரும் வழியெல்லாம் ஆங்காங்கே திரண்டு நின்ற மக்கள் கையசைத்து, ‘வாழ்க தமிழ்’ என்று கோஷமெழுப்பி எம்மை வழி அனுப்புகிறார்கள். வெளிநாட்டு அறிஞர்களுக்கு தமிழ் மக்களின் இந்த எழுச்சியும், மகிழ்ச்சியும், ஆர்வமும் அக்கறையும் உள்ள நெகிழ்ச்சியை ஏற்படுத்தின. அவர்களும் பதிலுக்கு, கையை அசைத்தும், கை கூப்பி வணங்கியும் ‘தமிழ் வாழ்க’ என்று குரலெழுப்பியும் தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்துக்கொண்டே வருகின்றனர்!

இதோ நாதஸ்வர ஓசையுடன் மாவிட்டபுரம் நம்மை வரவேற்கிறது; — மாவிட்டபுர மக்கள் வீதியெலாம் திரண்டு நின்றனர்.

“அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டு அறிஞர் குழுவை மாவிட்டபுரம் வரவேற்கின்றது.” என்ற தலைப்புடன் ஓர் பிரசுரத்தையும் அவர்கள் விநியோகித்தனர்.

“யாழ்ப்பாணத்தில் நடந்துகொண்டிருக்கும் மாநாட்டிற்கு வருகை தந்து சிறப்பித்த வெளிநாட்டு, உள்நாட்டு அறிஞர்களுக்கு தங்களது உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்!

“மாவிட்டபுரத்திற்கு மாநாட்டுக் குழுவினர் வருகை தந்தது பற்றி பெருமையுறுகின்றனர்.

“உறுதியுடனும் பொறுப்புடனும் செயலாற்றி மாநாட்டை யாழ்ப்பாணத்திற கூட்டுவதற்கு ஒழுங்கு செய்த தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் இன்றைய முகாமைக் குழுவுக்கும் தொண்டர் குழுவுக்கும் தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றனர்”

என்று கூறும் முகப்பு அட்டையுடன், மாவிட்டபுரத்தின் பெருமையை விளக்கியது அந்தப் பிரசுரம்.

மாவிட்டபுர ஆலயத்தின் கோபுர அமைப்பையும் அழகையும் பேராளர்கள் கண்டு வியக்கின்றனர். கோவிலின் உள்ளே சென்றும் அவர்கள் பார்வையிடுகின்றனர்.

அப்போது, “சாலை இளந்திரையன் வந்தாராமே— அவர் எங்கே!” என்று யாரோ ஒரு தமிழ் இளைஞர் ஆர்வமுடன்கேட்கிறார்.

“இதோ சாலை—சாலையில் நிற்கிறார்!” என்கிறார் டாக்டர் சாலை இளந்திரையன் நகைச்சுவையுடன்.

“வாருங்கள்! கோவிலுக்குள் நீங்கள் சென்று பார்க்கவில்லையா? — சாலை இளந்திரையன் அவர்களை அழைக்கிறார்கள்!

“என்னை விட்டு விடுங்கள்; நான் இந்த விடயத்தில் மட்டும் பெரியார் கட்சியைச் சேர்ந்தவன்! என்கிறார் சாலை!

மாவிட்டபுரத்திலிருந்து கந்தரோடை நோக்கிப் புறப்படுகிறோம்!

—வளரும்.

## மனித உரிமையும் சிங்கள ஆட்சியும்

—காசி — அன்பன்

மண்ணில் வாழ்ந்திடும் மக்கள் உரிமையை
மாநிலத்தில் மதித்திட வேண்டியே
திண்ண மோடிங்கு ஐ. நா. சபையுமே
திட்டமிட்டோர் பிரகடனத் தையே
எண்ணிலாத மனிதர் பயன் பெற
இருபதோடைந்து ஆண்டுகள் முன்னதாய்
கண்ணியத்துடன் விட்டதை நாமெலாம்
கைகுவித்துமே வாழ்த்துகள் கூறுவோம்.

ஈழ நாட்டிலே சிங்கள ஆட்சியும்
இந்த நல்ல பிரகடனத்தையே
வாழிய எனவேவர வேற்றது
வையமீதில் தென் னாபிரிக்காவுமே
நாளுஞ் செய்த கறுப்பின வேற்றுமை
நன்று அன்றெனக் கூக்குரலிட்டது
வாழுகின்ற தமிழரை ஈழத்தில்
வாட்டுகின்றது; உரிமை மறுக்குது.

பயங்கரத்தை உலகில் விதைக்கும்
பலஸ்தீனர்க்கும் உரிமை வழங்கவே
தயங்கிடாது சிறிமா அரசினர்
தமிழ் இளைஞரைக் காரணமின்றியே
பயங்கரத்தினர் என்று சிறையிலே
பழி புரிந்திடும் தன்மையைக் காண்கிறோம்
அயல் நாடெங்கும் உரிமையைப் பேசிடும்
ஆட்சியாளரிங்க நீதி புரிகிறார்.

சோவியத்தில் எழுத்தாளனைச் சிறை
சோவியத்தினர் செய்ய உலகமே
பாவம் என்றிட; அன்னான் விடுதலை
பண்ணப் பட்டனன்; ஈழத்திலே ஒரு
பாவமே அறியாத கவிஞனே
பாழுகின்ற சிறையிலே வாடுறான்
நாவிலே ஒரு வார்த்தையும், செய்கையில்
நஞ்சும் கொண்டவர் ஈழத்தரசினர்.

பஞ்சத்தால் மலை நாட்டிலே மக்களோ
பாரை விட்டுப் பயணமே செய்கிறார்
கொஞ்சமாயினும் ஈவு இரக்கமோ
கொண்டிலாத அரசு, தன் மக்கட்கு,
பஞ்சம் நீக்கி உணவு வழங்குதல்
பணியென்றேனோ உணர மறுக்குதே
கஞ்சியின்றி ஒருவன் மடிவதும்
காரில் மற்றவன் செல்வதும் நீதியா.

ஆளுகின்ற உரிமையும் இல்லையேல்
அரைச்சதம் வரிநாம் தரோம் என்றுமே
வாழுகின்ற உரிமைக் குரலினை
வைத்தனர் அன்று, போஸ்ரன் நகரிலே
பாழும் சட்டத்தால் தேர்தலே இன்றியே
பழிபுரிகிறார் யாழ்ப்பாண நகரிலே
நாளும் நாமோ வரியே கொடுக்கிறோம்
நம்மை ஆள உரிமை மிலார்க்குமே.

[illegible]ரதியென்ற பெயரையே சொல்வது
சட்டபூர்வமாய்க் குற்றமாம் என்றொரு
நீதி செய்திடத் தமிழரும் கேட்டதை
நிராகரித்தது சிங்கள ஆட்சியே
சாந்தியால் அரசோச்சிடும் அன்னவர்
தரணியில் மனித உரிமையைப் பேசுகிறார்
ஆதிமூலமே, ஆண்டவா, புத்தனே
ஐயகோ! சிங்கள ஆட்சியைப் பார்த்தியர்?

**10—12—74 மனித உரிமைகள் தினம்.**

## பயணம் நிற்காது

—ப. அவ. ஜெயபாலன்

நாங்கள் இன்னும்
நடக்கின்றோம்
சளைக்கவில்லை
கல்லை முள்ளை
கடும்புதரைக் கடந்து
எங்கள் இலக்கை
எட்டுகின்ற நோக்கோடு
நாங்கள் மேலே
நடக்கின்றோம்.
எங்கள் தமிழ்த்தாயின்
அடிமை விலங்கொடித்து
பொங்கு தமிழ் பாயும்
புது நாடு காண்பதற்காய்
நாங்கள் நடக்கின்றோம்
எங்களிடம் அறமுண்டு
எண்ணத்திடமுண்டு
சொந்தப் பலம் உண்டு
தோள்கொடுக்க
நண்பருண்டு
பாதைத் தடைகள்
பல கடந்து படை நீள
நாங்கள் மேலே
நடக்கின்றோம்
எங்கள் வாயை
இறுகப் பூட்டிவிட்டு
உங்களிடம் நீதி
உள்ளதுவா எனக்கேட்டு
சிங்களத்தார் சீறி
சித்திர வதைப்படுத்த
நாங்கள் கலங்காமல்
நடக்கின்றோம்.
அடிகள் எம்முடலை
துடித்தலற வைத்தாலும்
நடை தளரவில்லை
அற்ப சலுகைக்காய்
தப்பிலிகள் எம்படையை
காட்டிக்கொடுத்தாலும்
நாங்கள் சளைக்கவில்லை
ஒவ்வோர் தோழரையும்
உள்ளே சிறை கொண்டால்
ஒவ்வோர் குடும்பம்
எம்படையில் பெருகுகிறது
எங்கள் படைத் தலைவர்
எடுத்துரைக்கும்
பாதையிலே
நாங்கள் நடக்கின்றோம்
எங்களையும் சிறை
கொண்டால்
இல்லை எனில் எமன்
கொண்டால்
பாதை தெரியும்
பரம் பரைக்கு
ஆதலினால்
பயணம் நிற்காது
நடைதொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவும் சிங்கப்பூரும் பிரிந்ததுபோல தமிழ் ஈழமும் சிங்களமும் பிரியவேண்டும்!

## உங்கள் பாட்டை நீங்கள் பாருங்கள்! எங்கள் வழியை நாம் பார்க்கிறோம்!!

### வரவு செலவுத் திட்டவிவாதத்தில் சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை

'எங்களைப் பொறுத்த மட்டிலே அடிப்படையான சோசலிசத்துக்கு நாங்கள்—எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறோம். ஏனென்றால், தமிழ்ப் பிரதேசங்களிலே தமிழ் மக்களிடத்தில் இந்த முதலாளித்துவக் கொள்கைகள் இல்லை. நில உச்சவரம்புச் சட்டத்தை அமுல் நடத்துவதன் மூலம். நீங்கள் பார்த்திருப்பீர்கள். தமிழ்ப் பகுதிகளிலே பல ஏக்கர்கள் நிலத்தை வைத்திருந்து நிலச்சுவாந்தார்களாக இருந்தவர்கள் மிகச் சிலர் தான். ஆகவே, எங்களுடைய மக்களுக்குச் சோசலிசம் தானாகவே வரும்.

எங்களுடைய நிலச்சுவாந்தார்களிடமிருந்து 4,000 ஏக்கர் நிலத்தைத்தான் எடுத்தார்கள். சிங்கள நாட்டிலே 6 இலட்சம் ஏக்கர் நிலங்களை எடுக்கின்ற நேரத்திலே தமிழ்ப் பகுதியிலே 4,000 ஏக்கர்களைத்தான் எடுத்தார்கள். ஆகவே, அடிப்படையான சோசலிசத்தை—புரட்சிகரமான ஒரு சோசலிசத்தை அடைவதற்கு எங்களுடைய மக்கள் சர்வாதிகாரம் இல்லாமலே இயங்குவார்கள். எனினும் சிங்கள இலங்கையிலே நாம் சோசலிசத்தைக் கொண்டுவர வேண்டுமென்றால், சர்வாதிகாரத்தையும் ஓரளவுக்கு வைத்திருக்கத்தான் வேண்டும். ஏனெனில், எதிர்ச்சக்திகள் இருக்கின்றன.

ஆனால், எங்கள் நாட்டிலே சோசலிசத்தை முழுவதும் ஜனநாயகத்தோடு வைத்து இயக்கலாம் என்பது எங்களுக்குத் தெளிவாகத் தெரிகின்றது. சிங்கள மக்களுக்குச் சிங்கள நாட்டில் இருக்கும் பிரச்சினை தமிழ் மக்களுக்குத் தமிழ் நாட்டிலே இல்லை.

சரித்திரத்திலே இரண்டாயிரம் வருடங்களாக இருந்த நிலையை நாம் மீண்டும் காணக் கூடும் என்றால், சிங்கள நாடும் தமிழ் நாடும் உண்மையான சுதந்திரம் பெற்ற நாடுகளாக இயங்க கூடியனவாக இருந்தால், சிங்கள நாடும் தமிழ் நாடும் மீண்டும் தனித்தனியே உருவாகி நட்புறவு கொண்ட இரு நாடுகளாக, ஒரே பிராந்தியத்தில் ஒற்றுமையுடன் இயங்கக் கூடியதாக இருக்க வேண்டும். அப்படி இயங்கினால் தான் எங்கள் பிரச்சினையை நாங்கள் தீர்க்கக் கூடியதாக இருக்கும்.

அரசாங்கத்தை நடாத்தும் சிங்கள மக்களுக்கிடையேயும் இன்று பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று, அடிப்படையான சோசலிசத்தோடு முன்னேறுவதா, அல்லது சோசலிசத்தைக் கொஞ்சம் தடைப்படுத்தி மேற்கு நாடுகளின் பண உதவியோடு நாட்டை அபிவிருத்தி செய்வதா? அதற்காக சோசலிசத்தைப் பிற்போட்டு வைப்பதா என்ற பிரச்சினை அவர்களுக்கிடையே இருக்கின்றது. சிங்கள மக்களுக்கிடையே இருக்கும் இந்தப் போட்டியிலே நாம் தலைபோட மாட்டோம். அவர்கள் தாங்கள் விரும்பிய வழியில் செல்லலாம். அதிலே நாம் பங்கு கொள்ள விரும்பவில்லை. அவர்களின் பிரச்சினைகளை அவர்களே தீர்த்து வைக்கக் கூடியதாக அவர்களே இயங்க வேண்டுமேயொழிய நாம் இந்தப் பக்கத்தோடோ, அந்தப் பக்கத்தோடோ சேர்ந்து அந்த இயக்கத்தில் பங்கு பெற விரும்பவில்லை.

பஞ்சசீலத்தின் அடிப்படையிலே, நாம் சிங்கள மக்களின் விவகாரங்களிலே தலையிட விரும்பவில்லை. அதே போன்று அவர்களும் எங்கள் விவகாரங்களிலே தலையிடாமல் நாம் எங்கள் நாட்டை ஆள இடம் கொடுக்கவேண்டும்.

இப்படிப்பட்ட பிரச்சினை அண்மையிலே மலேசியாவிலே இருந்தது. அந்த நேரத்திலே மலேசியத் தலைவர்களும் சிங்கப்பூர்த் தலைவர்களும் சமாதானமாக இரண்டு நாடுகளையும் வரையறுத்து அந்த நிலையிலே வாழ்கின்றார்கள். மலேசியா ஒரு நாடு. சிங்கப்பூர் இன்னொரு நாடு என்று பிரிந்து வாழ்கின்றார்கள் என்றாலும் பிராந்திய நிலையிலே ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்து வாழ்கின்றார்கள்.

இன்று ஜனநாயக நாடான பெரிய பிரித்தானியாவிலே—ஒற்றையாட்சி இருக்கின்ற ஒரு நாட்டிலே — ஸ்கொட்டிஷ் மக்களின் சுயாட்சியை ஒத்துக்கொள்ளக் கூடிய சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. எனவே, அரைகுறையான பொருளாதார சோசலிசத்துக்கு இடமில்லை என்று சொல்வதுபோல, அரசியலிலும் அரைகுறைக்கு இடமில்லை. பொருளாதாரத்திலே அரைகுறைக்கு இடமில்லையென்று இந்த அரசாங்கம் சொல்லும் பொழுது அரசியலிலும் அரைகுறைக்கு இடமில்லையென்று ஒத்துக்கொள்ளத் தான் வேண்டும்.

சிங்கள பௌத்தத்துக்கு இடம் கொடுத்தால் தமிழர்களை விலக்கி நடத்தவேண்டும். தமிழர்களை வைத்துக் கொண்டு சிங்கள பௌத்தத்தை நாட்டிலே நடைமுறைப்படுத்த முடியாது. ஆகையால் யாழ்ப்பாண உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன பிரச்சினையை நன்றாக ஆராய்ந்து, அடுத்த வரவு செலவுத் திட்டத்தைச் சிங்கள நாட்டுக்கு மட்டும் வைத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய வருமானத்தை உங்களுடைய நாட்டுக்குச் செலவழியுங்கள். ஏன் எங்களுக்கு-மூன்றிலொரு பங்கான எங்களுக்கு ஆறிலொரு பங்கைச் செலவழிக்க வேண்டும்.

உங்கள் வருமானத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். எங்கள் வருமானத்தை நாங்கள் தேடிக் கொள்வோம். இது ஒரு முக்கியமான விஷயம். உங்கள் பொருளாதாரத்தையே நடத்த முடியாத நீங்கள் எங்கள் பொருளாதாரத்தை ஏன் நடத்துகிறீர்கள்? உங்களைச் சரிக்கட்ட முடியாத நீங்கள் எங்களைச் சரிக்கட்ட ஏன் முனைகிறீர்கள்? எங்கள் பிரச்சினையை எங்களோடு விட்டுவிட்டு அடுத்த வரவு செலவுத் திட்டத்தையாவது சிங்கள நாட்டோடு மட்டும் வைத்துக் கொள்ளுங்கள். எங்களை விலக்கி வைத்தால் எங்கள் விஷயத்தை நாங்களே பார்த்துக்கொள்வோம்!

மூன்று வருடங்களுக்கு முன் முத்தையன் கட்டுத் திட்டத்திலே முந்நூறு துண்டு நிலத்துக்காக, யாழ்ப்பாணத்திலிருந்து 12,000 இளைஞர்கள் விண்ணப்பம் செய்தார்கள். இன்று மிகவும் கஷ்டமான நிலையில் எங்கள் இளைஞர்கள் இருக்கிறார்கள். உங்களுடைய உத்தியோகங்கள் வேண்டாம். எங்களுடைய நிலத்தையே தரமுடியாத நிலையிலேதான் நீங்கள் இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட நிலையிலே கௌரவ யாழ்ப்பாணப் பிரதிநிதி சொன்னது போல, உங்களோடு நாங்கள் எப்படி ஒத்துழைக்க விரும்பினாலும் நீங்கள் விலக்கி நடத்துகிறீர்கள். ஆதலால் முற்றாக, தெளிவாக, திட்டமாக எங்களை விலக்கி வையுங்கள்; உங்களுடைய விஷயங்களை நீங்கள் பாருங்கள்; எங்களுடைய விஷயங்களை நாங்கள் பார்க்கிறோம் என்று சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அடிப்படை மனித உரிமைகளிலே — பண்பாட்டிலே — பஞ்சசீலத்திலே வாழவேண்டிய-வளரவேண்டிய-சிங்கள இனம், தன்னைத்தானே ஆளுகின்ற நிலையிலே நின்று தமிழரையும் சேர்த்து ஆளுகின்ற நிலையை விட்டு—தமிழர்களும் வாழ, சிங்களவர்களும் வாழ ஒத்துழைத்து—தங்கள் நாட்டிலே தங்கள் ஆட்சியை வைத்துக் கொண்டு அமைதியாகவும் பெருந்தன்மையாகவும் தமிழர் நாட்டைத் தமிழர் கையிலே ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகின்றேன்.

---

**பொலிஸ் இராணுவ......**

—2-ம் பக்கத் தொடர்

பொறுப்பில்லை. அரசாங்கத்துக்கும் பொறுப்பில்லை. இன்று கூட்டுறவு இயக்கத்திலே உரிய நேரத்தில் கடனைப்பெற முடிகிறதா? உரிய நேரத்தில் பசளையைப்பெற முடிகிறதா? இதை அரசாங்கம் கண்காணிக்கவேண்டும்.

நாட்டில் உற்பத்தி பெருக வேண்டுமென்றால் மக்களிடத்திலே சென்று உண்மை நிலையை விளக்கவேண்டும். மக்களிடத்திலே செல்ல வேண்டுமானால் கூட்டுறவு ஒரு பெரிய ஆயுதமாக இருக்கின்றது. அதிலே நீங்கள் இலாபம் பெற வேண்டுமானால், அரசாங்கம் நல்ல அறுவடை பெறவேண்டுமானால் அவற்றுக்கு நேர்மையானவர்களை, ஊக்கம் உள்ளவர்களை நியமித்து அவற்றை நடத்தவேண்டும்; மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்டு நடத்த வேண்டும். அவ்விதம் நடத்தினால் நல்ல ஆக்கத்தைக் காணமுடியும்.

உணவு உற்பத்தியும் இருக்கவேண்டும். விநியோகமும் இருக்கவேண்டும். விநியோகிக்கின்ற இடத்திலேதான் இன்று பெரும் கஷ்டமான நிலைமையிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் சரியாக இயங்குகின்றனவா என்பதைப் பார்க்கவேண்டும். இந்த அரசாங்கத்தின் தோல்வி கூட்டுறவுச் சங்கக் கடைகளினால் தான் ஏற்படும் என்பதை நான் இங்கே அச்சுறுத்திக்கூற விரும்புகிறேன். உங்களுடைய Waterloo நிச்சயமாகக் கூட்டுறவுச் சங்கக் கடைகளாகத்தான் இருக்கும். இந்த அரசாங்கத்தின் கடைசிக் காலம் அதுவாக அமையக் கூடாதென்றுதான் நான் கூறவிரும்புகிறேன்.

அரசாங்கம் இதை நேரடியாகப் பொறுப்பேற்கவேண்டும். கூட்டுறவு முறையை நல்ல வழியிலே—நேர்மையான வழியிலே கொண்டியக்கவேண்டும். கூட்டுறவு இயக்கம் கிராம மக்களோடு தொடர்புடையதாக இயங்கவேண்டும். அது உண்மையான சோசலிச அடிப்படையிலே இயங்கவேண்டும். அரசியல் கண்கொண்டு இதைநோக்கக்கூடாது. [illegible] சமுதாயப் புரட்சியை ஏற்படுத்தவேண்டுமென்றால் அதுதான் சரியான ஒரு களம். அந்தக் களத்தை நாங்கள் சரியாக பயன்படுத்தவேண்டும்.

எனக்கு முன் பேசிய பேச்சாளர் சோசலிச பாதை ஒரு நீண்ட பாதை எனவும் சோசலிச பாதையிலே நிற்க இடமில்லை; நிச்சயமாக நின்றும் பார்க்கமுடியாது; துரிதப்படுத்தவேண்டும் என்றும் கூறினார். இந்த ஆகர்ண சக்தி இன்றைக்கு இருக்கின்ற நிலையை நீங்கள் அறிவீர்கள். முதலாளித்துவப் பிடி இன்று கோரப்பிடி பிடித்துக்கொண்டிருக்கின்றது. அந்த ஆகர்ண சக்தி நிச்சயமாக உங்களை இழுத்து விழுத்திவிடும் என்பதை நீங்கள் நம்பவேண்டும்.

இந்த நாட்டிலேயிருக்கின்ற தொழிலாளிகளின்—விவசாயிகளில்—நீங்கள் நம்பிக்கை வைக்கவேண்டும். அதை விட்டுவிட்டுப் பொலிசாரிடத்திலும் இராணுவத்தினரிடத்திலும் நம்பிக்கை வைத்தால் 'அலண்டே'யினுடைய கதி உங்களுக்கு ஏற்படும் [illegible] அச்சுறுத்திக் கூற விரும்புகிறேன்.

---

## வாசகர் கருத்து

சுதந்திரன் ஆசிரியர் அவர்கட்கு:-

சுதந்திரன் பத்திரிகையைத் தடைசெய்யவேண்டும் என்று எட்டப்பர்கள் சிலர் அரசைத் தூண்டி வருகின்றனர் என்றசெய்தியை அறிந்து திடுக்கிட்டேன்! இலங்கைத் தமிழர்களின் ஒரேயொரு உரிமைக்குரலிலும் அரசு கைவைத்தால், தமிழ் மக்கள் பொறுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள்!

—ஆர். பி. சங்கர்லால்,
மட்டக்களப்பு.

ஃ ஃ ஃ

அன்புள்ள ஆசிரியருக்கு:-

குமாரசூரியர் அமைச்சரானபின் தமிழன் விழ்ந்த வரலாறு எனும் கட்டுரையை சுதந்திரனில் படித்தேன். இங்கே எமது கிராமத்திலும் ஒரு சி. ல. சு. க. கிளை நிறுவ சில வாலிபர்கள் முயல்கிறார்கள். தமக்கு இதனால் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும் என்று இவர்கள் நம்புகிறார்கள், பாவம்! கட்டுரையில் நீங்கள் தந்த வெற்றிப் பட்டியல் இவர்களுக்கு காணிக்கை!

—எஸ். பி. கே.
தென் மட்டுவில்
சாவகச்சேரி

ஃ ஃ ஃ

அன்புள்ள ஆசிரியர் அண்ணாவுக்கு:-

தங்களின் சீரிய பணியினால் சுதந்திரன் புதிய உத்வேகத்துடன் பவனி வருகிறான். தங்களின் அரசியல் மடல்களில் தமிழனின் உயிர் மூச்சாம் கடமை கண்ணியம் கட்டுப்பாடு இழையோடி என்போன்ற இளம் உள்ளங்களை கொள்ளைகொள்ள வைக்கிறது. யாழில் எழுந்த தமிழோசை இத்தரணியில் சுதந்திரன் மூலமாகத்தொடர்ந்து முழங்கட்டும்!

பரவலான செய்திகளையும் இரத்தினச்சுருக்கமாக சுதந்திரனில் வெளியிட்டு வாசகர்களின் எண்ணிக்கையை மேலும் பெருக்கிக்கொள்ளலாமே!

—த. கனகசிங்கம்
கல்முனை பசார்.

ஃ ஃ ஃ

அன்புள்ள ஆசிரியருக்கு:-

தமிழுணர்ச்சிப்பொறி பறக்கும் உங்கள் எழுத்துக்களால் கவரப்பட்டு, உங்கள் தமிழ்ப்பக்தியைக் கண்டுபெருமகிழ்வு அடையும் தம்பிகளில் ஒருவனாகிய நான் ஒவ்வொரு கிழமையும் சுதந்திரன் எப்போது வரும் என்று ஆவலுடன் காத்திருந்து வாங்கிப் படிக்கிறேன். சுதந்திரனில் வெளி வந்திருந்த தீபாவளிக் கவிதை நன்றாக இருந்தது.

—ப. சந்திரசேகரம்
ரத்தோட்டை

ஃ ஃ ஃ

சுதந்திரன் ஆசிரியருக்கு:-

"தமிழன் மரம் ஏறுவான்" என்கிற கருத்து சிங்களப் பாடப் புத்தகமொன்றில் இடம் பெற்றிருப்பதாக சுதந்திரனில் அண்மையில் வெளிவந்த கட்டுரையொன்றில் குறிப்பிடப்பட்டிருந்ததே! அந்தச் சிங்களப் புத்தகம் எது என்பதை அறியத் தருவீர்களா?

—சி. கணேசலிங்கம்
கடற்கரை வீதி
கொடிகாமம்.

'குமார ரசனய' (Kumara Rachanaya' 2nd Reader)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

# சிங்கள மக்களிடம் வகுப்புவாதம் இல்லையென்றால் தமிழர் உரிமைகளை வழங்குவதற்கு தடையென்ன?

## தேசிய பேரவையில் நேமிநாதன் கர்ச்சனை!

இங்கேபேசிய நீதியமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா, நாங்கள் தொம்பே, அத்தனகலபோன்ற இடங்களுக்குச்சென்று சிங்கள மக்களுடன் பேசி எங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டுமென்று குறிப்பிட்டார். இந்தப்பேச்சு, தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கு சிங்கள மக்கள் எதிராக இருக்கிறார்கள் என்ற கருத்தையே எடுத்துக் காட்டுகிறது.

அது உண்மையானால்— தெற்கில் வகுப்புவாதம் மறைந்துவிட்டதாக பிரதமர் வடக்கில் கூறியது முழுக்கமுழுக்க தவறானதாகிவிடும். இந்த முரண்பாடான கருத்துக்களில் ஏதோ ஒன்று மட்டுமே சரியாக இருக்க முடியும்.

தமிழ்த் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் தமிழ்மக்களுடன் நேரடியாகப்பேசியே பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியுமென்று நீதியமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டார். இப்படித்தானா — இந்த முறையில்தானா கச்சதீவுப் பிரச்சினை போன்ற முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டதென்று நான் அமைச்சரைக்கேட்கவிரும்புகிறேன்!

கச்சதீவு சம்பந்தமாக ஏற்பட்ட தீர்வுக்கு தமிழ்நாடு அரசும் தமிழ்நாட்டு அரசியற்கட்சிகளும் தங்கள் பூரணமான எதிர்ப்பைதெரிவித்தன. ஆனாலும் இலங்கை அரசாங்கம், இந்திய பிரதமரிடம் முதலில் தமிழ் நாட்டு மக்களிடம் சென்று கச்சதீவு பிரச்சினையில் அவர்களின் கருத்தையறிந்து வரும்படி கூறியதா? இல்லையே! நீங்கள் இந்தியப் பிரதமருடன் பேசி தீர்வு கண்டீர்கள்!

அதே போல— நாடற்றவர் பிரச்சினையிலும், நீங்கள் சம்பந்தப்பட்ட மக்களுடன் பேசி அவர்களின் கருத்தையறிய முயற்சிக்கவில்லை. அந்த மக்களின் பிரதிநிதிகளுடன் கூட நீங்கள்பேச மறுத்துவிட்டீர்கள். இந்தியப் பிரதமருடன் நேரடியாகப் பேசி ஒப்பந்தம் செய்தீர்கள்!

உங்களைச் சிங்கள மக்கள் தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ததுபோல எங்களைத் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஐந்து தேர்தல்களில் தெரிவு செய்து அனுப்பிவருகிறார்கள். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நாங்களே. பிரச்சினைகளைத் தீர்க்கவிரும்பினால் எங்களுடன் பேசித் தீர்க்க முன் வாருங்கள்!

நாங்கள் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லையென்று இங்கு பேசிய வட்டுக்கோட்டை உறுப்பினர் தியாகராசா கூறினார். அதுபற்றி நான் அதிகம் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை. இதுபோன்ற சம்பவங்களை வரலாற்றில் நாம் பார்த்திருக்கிறோம். வெள்ளைக்காரர்கள் ஆண்ட நேரத்திலும் இதுபோன்ற விழல் கருத்துக்களை எட்டப்பன், காக்கை வன்னியன் போன்றவர்கள் கூறியது எங்களுக்குத் தெரியும்!"

—இவ்வாறு 28-11-74ல் தேசிய பேரவையில் திருகோணமலைபா.உ., பா.நேமிநாதன் முழக்கமிட்டார்!



## சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ் இளைஞர் பேரவையும் பங்குபற்றும்

சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களை அரசு விடுதலை செய்யவேண்டும்; அல்லது நீதிமன்றத்துக்கு விசாரணைக்கு கொண்டுவரவேண்டும். இந்த இரண்டில் ஒன்றை 31.12.74க்கு முன்னர் செய்யாவிட்டால், 1975 ஜனவரி முதல் வாரத்தில் சட்டமறுப்பு இயக்கத்திலீடுபடுவது என்று தமிழர் கூட்டணி தீர்மானித்திருக்கிறது அல்லவா?

தமிழர் கூட்டணியின் இச் சட்டமறுப்பு இயக்கத்தில் பங்குபற்றுவதென்று தமிழ் இளைஞர் பேரவையும் தீர்மானித்திருக்கிறது. முருங்கனில் நடைபெற்ற இளைஞர் பேரவைகளின் இணைப்புக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக பேரவை செயலாளர் திரு. அ. வரதராசன் தெரிவித்துள்ளார்.

## சிரிப்பு!

"கிளிநொச்சியின் தலைவர் குமாரசூரியர், தேசியவாதி குமாரசூரியர், கிளிநொச்சியின் தலைவர் குமாரசூரியர், புரட்சித்தலைவர் குமாரசூரியர் போன்ற கோஷங்கள் உடுப்பிட்டியில் நடைபெற்ற ஊர்வலத்தில் எழுப்பப் பட்டன!!

—செய்தி(ஈழநாடு 3-12-74)


கிங்ஸ்லி 8வது வெற்றிவாரம் பிளாஸா—

விஷ்ணுவர்தன், சந்திரகால நடித்த

சித்திராலயா அளிக்கும் ஸ்ரீதரின்

ஓ மஞ்சு





7-வது வாரம்

கெப்பிட்டல்

சிவாஜி, லட்சுமி, விஜயகுமாரி, எஸ். வரலட்சுமி, முத்துராமன், சிவகுமார் நடித்த-

ராஜ ராஜ சோழன்

தென்னகத்திலேயே முதன்முதலாக தயாரித்த "சினிமாஸ்கோப்" தமிழ் வண்ணச் சித்திரம்

இப்பொழுது 2வது வாரம் காட்சியளிக்கிறது!

வெலிங்டன்

சிவாஜி—வாணிஸ்ரீ நடித்த

வசந்த மாளிகை

(ஈஸ்ட்மென் கலர்)

ரீகல் — மட்டுநகர்.

தமிழனின் பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் விளக்கும் முதன் முதல் தயாரிக்கப்பட்ட வண்ண —சினிமாஸ்கோப் தீந்தமிழ் திரையோவியம்

சிவாஜி, விஜயகுமாரி, நம்பியார், — நடித்த

ராஜ ராஜ சோழன் (கலர்)

பாடும் மீனுறையும் நகராம் மட்டு நகரின் மக்களே இவ் அரிய சந்தர்ப்பத்தை நழுவவிட விடாதீர்கள் சந்தியுங்கள் ராஜ ராஜ சோழன்.

இப்பொழுது எதிரொலிக்கிறது!

கடைசி வாரம் செல்லமகால் — நெல்சன்
(கொட்டாஞ்சேனை) (திருமலை)

சிவாஜி, கே. ஆர். விஜயா, நாகேஷ், S. S. ராஜேந்திரன், லட்சுமி, சிவகுமார், ஜோதிலட்சுமி, காலஞ்சென்ற ரி. எஸ். பாலையா

—நடித்த—

கே. பாலசந்தரின் எதிரொலி

நீதிமன்ற வழக்கு விசாரணைக் கட்டங்கள் கட்டாயம் பார்க்கவேண்டியவை.

மலருக்கு மலர் தாவும் வண்டாக இருக்கவில்லை அவன்! மலர்களையே தன்னை நோக்கித் தாவச் செய்யும் மன்மதனாக விளங்கினான்! முடிவு!

கெயிட்டியில் 5வது வாரம்

ரீங்காரமிடும் பொன் வண்டை தரிசியுங்கள்.

ஜெய்சங்கர், பாரதி, மனோரமா, ஜெய்சித்ரா, சுருளிராஜன், சோ நடித்த-

பொன் வண்டு

கேட்டு ரசிக்க வாருங்கள்:- யாருக்காக, இந்த மாளிகை ரத்ன மாளிகை! பாடியவர்:- மனோரமா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகாமாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974ம் வருடம் டிசம்பர் மாதம் 8-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.